Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 மார்கழி-27 11-01-2005 செவ்வாய்க்கிழமை ஓசை -328


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-1120)

### சிறிலங்காவின் விருப்புவெறுப்புக்களுக்கு அப்பால்

# சர்வதேச நாடுகள்-புலிகள் உறவில் உருவாகியுள்ள புதிய வாய்ப்புக்கள்!

### நியூஸ்வீக் சஞ்சிகை தகவல்

**சிறிலங்கா அரசு விரும்புகின்றதோ இல்லையோ விடுதலைப் புலிகளுடன் சர்வதேச நாடுகள் உறவு கொள்ளும் புதிய வாய்ப்புக்கள் தற்பொழுது உருவாகியுள்ளதெனவும், விடுதலைப் புலிகளைத் தடை செய்திருந்த நாடுகள் கூடத் தற்பொழுது தொடர்புகளை ஏற்படுத்துவதாகவும் ஆங்கில சர்வதேச சஞ்சிகையான நியூஸ்வீக் தனது இவ்வார வெளியீட்டில் தெரிவித்துள்ளது.**

இது குறித்த தனது நியூஸ்வீக்கின் குறிப்பில் மேலும் குறிப்பிடுகையில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையத்தின் பிரதிநிதிகள் தமிழ் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளனர் என்று சுனாமி நிவாரணப் பணிகளைக் கையாளும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை நாம் அவதானத்துடன் செய்கிறோம் என்றும், விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்ற வகையில் சட்ட கட்டுப்பாடுகள் இருப்பதாகவும், ஆனால் நாம் இதைச் செய்கிறோம் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம் என்றும், நாம் அங்கிருப்பது மனிதாபிமான நோக்கத்துக்காகவே என்பதை அவர்கள் தவறாக விளங்கிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுனாமி' கடற் கொந்தளிப்பால் 2000 மாணவர்கள் 25 ஆசிரியர்கள் பலி

### வலயக்கல்விப் பணிமனைகளின் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் இரண்டாயிரத்திற்கும் மேற் பட்ட மாணவர்களும் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பலியானதாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு இது வரை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஏதோ ஒருவகையில் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க சுனாமியால் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இரு நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடசாலைகள் திறக்கப் படவில்லை. அதேவேளை நூற்றுக்கும் அதிகமான பாடசாலை

(12 ஆம் பக்கம் பா[illegible]க)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீளக்குடியமர்த்த மட்டக்களப்பிற்கு சுவிஸிலிருந்து தொண்டர்கள்

### சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஏற்பாடு

சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில், சுவிஸ் மக்களின் உதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 1,000 குடும்பத்தை மீள் குடியேற்றுவதற்கு உதவும் முகமாக 26 தொண்டர்கள் நேற்று முன்தினம் தாயகத்தை நோக்கி பயணமாகியுள்ளனர்.



இக்குழுவில் 13 சுவிஸ் நாட்டவர்களும், 13 ஈழத் தமிழர்களும் தமது சரீர உதவிகளை செய்வதற்காக நேற்று முன்தினம் பிற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கு மக்களிற்கான மனிதாபிமானப் பணியை அரசு செய்யவில்லை

### - தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் குழு

வடக்குக் கிழக்கில் வாழ்ந்து வரும் மக்கள் நீண்டகால யுத்தத்தால் உயிர்,உடமைஎன்ற அனைத்தினாலும் பாதிக்கப்பட்டு வாழ்வியல் அவலங்களைச் சந்தித்து வந்தவர்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் இயற்கை ஏற்படுத்தியுள்ள அழிவுகளும் வடக்குக் கிழக்கு மக்களையே மிகவும் மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. உயிர்,உடமை அனைத்தையும் இழந்த நிலையில் மக்கள் படும் அவலம் ஈடுசெய்ய முடியாத பேரவலமாகவே உள்ளது. இத்தகைய இயற்கை அனர்த்தத்தினால் மிக் மோசமான அளவில் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களிற்கான உடனடித்தேவைகளையோ,மனிதாபிமானப் பணிகளையோ இலங்கை அரசு செய்ய முன்வரவில்லை. அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களிற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுனாமி' முறைப்பாட்டுப் பிரதி வழங்க 25 ரூபா பெறும் பொலிசார்

(நல்லூர்)

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் சிறிலங்காப் பொலிசார் முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்குவதற்கு இருபத்தைந்து ரூபா பணம் அறவிட்டுவருவதையிட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள நலன் புரிநிலையங்களில் மக்களுடைய விபரங்களை சிறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னாட்டு புலனாய்வு நிறுவனமும் சர்வதேசப் பொலிசும் இல.வருகின்றன

சிறிலங்காவில் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களிற்கான சர்வதேச உதவியுடன், சர்வதேசப் பொலிசும் (இன்ரர்போல்) பன்னாட்டுக்குற்றப் புலனாய்வு நிறுவனம் கூட நாட்டின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுதலுக்கு உதவுவதற்குரிய நடவடிக்கை எடுக்கவுள்ளது. இப்பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலமைகளை அறிவதற்கும், பொலிசாரிற்கு சட்டத்தை அமுலாக்குவதற்கு உதவுவதற்கும் பன்னாட்டுக் குற்றப்புலனாய்வுப் பிரிவுத்தலைவர் றொனால்ட் நோபிள் இன்று இங்கு வரவுள்ளார். இவர் சிறிலங் காவின் பொலிஸ் தலைவர் சந்திரா பெர்னாண்டோவைச் சந்திப்பதுடன் பாதிக்கப்பட்ட காலி மற்றும் ஏனைய இடங்களிற்கு விஜயத்தை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது. இவர் தாய்லாந்திலிருந்து இங்கு வரவுள்ளார். பின்னர் இவர் மாலைதீவிற்குச் செல்லவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனேரிக் குண்டுத் தாக்குதலை தேச விரோதிகளே மேற்கொண்டனர்

### -மட்டு- அம்பாறை அரசியல் துறை தெரிவிப்பு

வாகனேரிக் கைக்குண்டுத் தாக்குதலை இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுகின்ற தேசவிரோதிகளே மேற்கொண்டதாக விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 08.01.2005 அன்று மாலை 8.30 மணியளவில் நடைபெற்ற கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று பேர் மரணமடைந்ததுடன் 36 பேர்வரை காயமடைந்துள்ளனர். இக்கிராமத்தில் இரு மதக்குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இச்செயல் நடைபெற்றுள்ளது. எனவே இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலர் என்ற நிலையிலிருந்து கொபிஅனான் தவறிவிட்டார்

இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கையின் அரசியல்வாதிகள் சொல்கின்ற விடயங்களைக் காட்டிலும் மேலதிகமாகவே யோசித்திருக்க வேண்டும். அதனடிப்படையில் அவர் மிகவும் புத்தி சாதுரியமாக நடந்திருக்க வேண்டும். அதேவேளை அனர்த்தத்தில் பாதிப்புக்குள்ளான மக்களை உரிய முறையில் சந்தித்திருக்க வேண்டும் என தேசிய வேற்றுமை மற்றும் நிறவெறிக்கு எதிரான அமைப்பின் தலைவி நிமல்கா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; இதன் அடிப்படையில் ஐ.நாவின் செயலாளர் நாயகம் வன்னிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்திருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமையானது ஐக்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**N.E.C.கல்வி நிலையம்**
**ஏ.9 வீதி, கிளிநொச்சி**

புதிய ஆண்டுக்கானA/L 2007 இற்கான கணித,விஞ்ஞானப் பிரிவுகள் எமது தனித்துவமான ஆசிரியர் குழுவால் 12.01.2005 பிற்பகல் 03 மணிக்கு ஆரம்பமாகின்றன. பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்.நிர்வாகம். (5543)

## பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

இன்று நடைபெற விருந்த கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று நடைபெறமாட்டதெனவும், கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

# முல்லை. நகரில் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணி தீவிரப்படுத்தப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி பேரலைத்தாக்கத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட முல்லை நகரின் இடிபாடுகளை அகற்றும்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அனர்த்தத்தினால் முல்லைத்தீவில் கடற்கரையை அண்டிய வீடுகள், தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள், வாணிப நிலையங்கள் என அனைத்துக் கட்டடங்களும் இடிந்து தரைமட்டமாகக் காணப்படும் இதே வேளை இக்கட்டட இடிபாடுகளை தமிழீழவிடுதலைப் புலிகளின் நெறிப்படுத்தலில் அகற்றும் பணி துரித கதியில் நடைபெற்று வரும் இதேவேளை நகரை அண்டிய பகுதியின் கனிசமானபகுதி அகற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச,தீ)

## முன்அனுமதிபெற்ற பின் பொருட்களை எடுத்துச் செல்லவும்

சுனாமி பேரலை அனர்த்தத்தால் அழிவடைந்த முல்லைநகர்ப் பகுதியிலிருந்து தமது உடமைகளை மீட்டுச் செல்வோர் முன் அனுமதி பெற்ற பின்பே எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர்.

மேற்படி அனர்த்தத்தினால் உடமைகள் அனைத்தும் முற்றாக அழிவடைந்த நிலையிலும் அவற்றை மீட்கும் செற்பாட்டில் உரிமையாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

தமது உடைவுக்குள்ளான வீடுகளின் மரங்கள், கூரைத்தகடுகள் மற்றும் ஏனைய தளபாடங்களும், மீன்படி உபகரனங்களின் உதிரிப் பாகங்களும் உரிமையாளர்களால் மீட்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு தமது உடமைகளை மீட்கவரும் மக்கள் மீன்பிடிசார்ந்த பொருட்களை முல்லை நகர்ப்பகுதிக்கு வெளியே கொண்டு செல்வதாயின் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கத் தலைவரின் அனுமதியையும் மீன்பிடி சாராத பொருட்களை எடுத்துச் செல்ல கடற்புலிகளின் முல்லைத்தீவு அரசியல்துறையினரின் அனுமதியையும் பெற்ற பின்பு எடுத்துச் செல்லுமாறு அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள தமிழீழ காவல்துறை அதிகாரி கேட்டுள்ளார். (ச,தீ)

## சிற்றூர்தி, பேருந்து சாரதிகள் நடத்துனர்கள் கவனத்திற்கு

மிதி பலகையில் நின்று பிரயாணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனைச் சகல சிற்றூர்தி, பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் கடைபிடித்து நடக்கவும். அத்துடன் வாசல் பகுதிக் கதவுகள் பிரயாணிகளை ஏற்றியவுடன் சாத்துதல் வேண்டும். தம்மால் அறிவுறுத்தப்பட்ட விடயங்களைக் கடைபிடிக்காது நடக்கும் சகல சிற்றூர்தி, பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் சி. சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை 09.01.2005**
**2005ஆம் ஆண்டிற்கான உறுப்புரிமையைப் புதுப்பித்தல் தொடர்பாக**

## அறிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்துவர்களாக இணைந்து 31.12.2004 உடன் இறுப்புரிமை காலாவதியாகும் அங்கத்துவர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் எதிர்வரும் 31.01.2005 இற்கு முன்னர் எமது பிரிவுக் காரியாலயங்களிலோ, அல்லது மாவட்டக் காரியாலயத்திலோ உரிய அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பிக்கவும், புதிதாக இணைந்து கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

க.கணேஸ்
கௌரவ செயலாளர்.

(சி.11069)

## கூ.ச.பணிப்பாளர் சபையினருக்கு செயற்றிறன் உயர்வுப் பயிலரங்கு

கிளி.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் கிளி.கூட்டுறவுத் திணைக்களம், கிளி. தமிழீழ நிர்வாக சேவை ஆகியவற்றின் அனுசரணையுடன் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான செயற்றிறன் உயர்வுப் பயிலரங்கு கடந்த 6 ஆம் திகதி கிளி.தமிழீழ நிர்வாக சேவை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கிளி.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.கந்தசாமி, கிளி.தமிழீழ நிர்வாக சேவையின் கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர் க.மயூரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## அவசர கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பட்டதாரி பயிலுனர்களாக அரச திணைக்களங்களில் நியமனம் பெற்ற 80 பயிலுனர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி பயிலுனர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

## சாவு அறிவித்தல்

**திருநாவுக்கரசு மயில்வாகனம்**

வற்றாப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மயில்வாகனம் அவர்கள் 10.01.2005 அன்று திங்கட்கிழமை காலமானார் இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவருமாவார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று (11.01.2005) செவ்வாய்க்கிழமை பி.ப.4.00 மணியளவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:-
மகன் புனிதன் போராளி
(மருத்துவப்பிரிவு)

(5547)

## தொடர்பு கொள்ளவும்

❋ தெய்வேந்திரன் சிவராசா என்பவர் அவரின் மாமா சின்னு ஆறியன் என்பரை எங்கிருந்தாலும்வற்றாப்பளைப் பாடசாலைக்கு வருமாறு அறிவிக்கின்றார்.

❋ கோகிதராசா மனோன்மணி என்பவர் இந்தியா - புதுக்கோட்டையில் வசிக்கும் மகள் இந்திராணி குடும்பம் , மோகன் குடும்பம்,தங்கை நந்தினி குடும்பம் இவர்கள் எங்கிருந்தாலும் புலிகளின் குரல் ஊடாக தகவல் தருமாறு கேட்டுக்கொள்கின்றார்.

❋ சுப்பிரமணியம் சுரேஸ்குமாரி என்பவர் மகன் சின்னத்தம்பி, சுப்பிரமணியம் (தந்தை) என்பவரை எங்கிருந்தாலும் கிராம சேவையாளர் நல்லூர் வடக்கு து/06 என்னும் முகவரிக்குத் தெரியப் படுத்தவும்.

## 05 ஆம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில்
17 - 07 - 1974



தாயக மடியில் விதையாக
11 - 01 - 2000

**கடற்புலி மேஜர் இன்ப நிலா**
**மயில்வாகனம் கன்னிகா ராணி**

மருதங்கேணி தெற்கு
வடமராட்சி கிழக்கு

காலங்கள் ஐந்தும் கடுகதியில் மறைந்தாலும்
கணமேனும் உன் நினைவு
எமை விட்டு நீங்காது
தேசத்தின் தேவைக்காய்
செந்தமிழின் விடிவிற்காய்
சொந்தங்களை மறந்து
தேசத்தில் பற்றுக் கொண்டு
பகைமையை வீரமுடன் எதிர்கொண்டு
தேசத்திற்குப் புகழ் தேடித் தந்த
எங்கள் இன்ப நிலாவே!
விடுதலைக்காய் நீ பிறந்த
மண்ணிலேயே வீரகாவியமானாய்
தேடினாலும் இனி உன்திருமுகத்தைக் காண்போமா
உன் நினைவுடன்
கை கூப்பித் தொழுகின்றேன்
உன் கல்லறையில்

முகவரி:-
மருதங்கேணி தெற்கு.

(5546)

தகவல்:-
அண்ணன் சண்முகம்

Direct Start

**O/L மாணவர்களுக்கான புதிய கணினி பிரிவுகள்**
**ஜனவரி மாதம் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகும்.**

**கல்வி ஆண்டு 2005**

- Diploma in MS Office (MSO)
- Diploma in Computer Studies (DICS)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)
- Diploma in Computerised Accounting (DCA)

அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்



இலவச பாடநூல்களும் குறிப்புகள்

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன்

- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவனை முறையிலும் செலுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

**AFFILIATED TO ASIAN COMPUTERS**

| கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. | 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. ✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. ✆ 077-3039587 |
| --- | --- | --- | --- | --- |

(சி-11126)

# கலிபோர்னியாவில் 257 கி.மீ வேகத்தில் பனிப்புயல்

# 8 அடி உயரத்திற்கு பனி கொட்டியது;மக்கள் இடம்பெயர்வு

## -49 மாவட்டங்களில் அவசரகால நிலை பிரகடனம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கடும் பனிப்புயல் வீசியது. 8அடி உயரத்திற்கு பனி கொட்டியது. இதனால் பல ஆயிரக்கணக்காண மக்கள் இடம்பெயர்ந்துள்ளதோடு நூற்றுக்கணக்கான கார்கள் பனியில் சிக்கிக் கொண்டன.**

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில்,கடும் பனிப் புயல் வீசியது. மணிக்கு 257 கி.மீ. வேகத்தில் பனிப்புயல்காற்று வீசியது. 8அடி உயரத்திற்கு பனி கொட்டியது.இந்தப் பனிப் புயலில் நூற்றுக்கணக்கான கார்கள் சிக்கிக் கொண்டன. சான்பிரான் சிஸ்கோ நகரை அடுத்த நாபா, மரீன் ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அத்தோடு மழையும் கொட்டியது. இதனால் வீதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

ஓஹியோ ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் கரையோரங்களில் வசித்தவர்கள்வீடுகளைக்காலி செய்துவிட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். 8ஆண்டுகள் இல்லாத உயரத்தை ஓஹியோ ஆறு தொடும் என்று வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்தனர்.

ஓஹியோ மாநில கவர்ணர் அந்த மாநிலத்தின் 88-இல்49 மாவட்டங்களில் அவசரநிலைப் பிரகடனத்தை அமுற்படுத்தினார். பனிப்புயல், மழைவெள்ளம் ஆகியவைகாரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஓஹியோவில் வசிக்கும் ஒரு இலட்சம் பேர் மின்சாரம் இல்லாமல் அவதிப் படுகின்றனர்.

# அமெரிக்க உலங்கு வானூர்தி இந்தோனேசியாவில் வீழ்ந்து நொருங்கியது


## - நிவாரணப்பணி இடைநிறுத்தம்

(ஜகார்த்தா)

பூகம்ப பேரலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் அஷே மானிலத்திற்கான நிவாரணப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

அங்கு அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான உலங்கு வானூர்தி வீழ்ந்து நொருங்கியதே இதற்குக் காரணமாகக் கூறப் படுகின்றது. இவ் விபத்தில் யாரும் காயமடையவில்லையென அமெரிக்கக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இம் மாநிலத்திற்கான பொருட்கள் மாநில தலைநகரில் அமைந்துள்ள விமான நிலையத்தின் ஊடாகவே விநியோகிக்கப்படுகின்றன. அங்கு இவ் விமானம் வீழ்ந்தமையால் பொருட்களை அனுப்ப முடியாதுள்ளது. இம் மாநிலத்தில் 06 இலட்சம் பேர் முகாம்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அஷே மாநில தலைநகரில் நேற்று மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது 3.7 ரிக்டர் அளவு பதிவாகியுள்ளது.



இந்தனோசியாவின்பண்டா ஆசே விமான நிலையத்திலிருந்து 1கி.மீ அப்பாலுள்ள நெல்வயலினுள் நேற்றுக் காலை விழுந்த அமெரிக்கக் கடற்படையின் சீகவாக்ஸ் வகை உலங்குவானூர்தியின் சேதப்பகுதிகளை அமெரிக்கத்திருத்துனர்கள் இருவர் தேடுகின்றனர்.

# வியட்னாம் யுத்தத்திற்குப் பின் தற்போது கூடுதலான அமெ.துருப்புக்கள் தெற்காசியாவில்

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்தில் வியட்னாம் யுத்தத்திற்குப் பின்பு அமெரிக்கா மிகப்பெரியளவில் துருப்புக்களைத் தற்போது தரையிறக்க ஆரம்பித்திருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

90 விமானங்கள்,18 கப்பல்கள் மூலம் 13000 துருப்புக்கள் தெற்காசியப்பிராந்தியத்தில் தரையிறக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தத் துருப்பினரில் ஒரு பகுதியினர் ஏற்கனவே தெற்காசியாவில் தமது நிலைகளை அமைக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்தோனேசியாவிலும், இலங்கையிலும், அமெரிக்கத் தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆசியாவிலும்,இலங்கையிலும் தங்கவுள்ள அமெரிக்கப்படைகள் இந்த நாடுகளினஉள்ளநாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும் என சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

அமெரிக்கப்படைகளின் வருகை அந்த நாடுகளின் இறைமையைப் பாதிக்கும் விதமாக அமைந்து விடக் கூடாதென்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

# சுனாமியால் தாய்லாந்தில் இறந்தவர்களில் 2184 பேர் அடையாளம் காணப்படவில்லை

(பாங்கொக்)

தாய்லாந்தில் சுனாமி அலையால் இறந்தவர்கள் 5305 பேர் இவர்களில் 2184 பேர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை. இறந்தவர்களில் நாடு அடையாளம் தெரியாதவர்கள் 211 பேர்தான் என முன்பு கூறப்பட்டது. ஆனால் இறந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதி செய்ய தனியாக ஒரு கமிட்டி அமைத்து ஆராய்ந்தபோதுதான் 2184 பேரின் அடையாளம் குறித்து சந்தேகம் எழுந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் வோஷிங்டனில் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)


இந்திய புதிய காப்புரிமைச் சட்டத்துக்கு எதிர்ப்புப் தெரிவித்து அமெரிக்காவில்,வோஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு எதிரே நேற்று முன்தினம் பல்வேறு அமைப்புக்ளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சர்வதேச மருந்து நிறுவனங்களிடம் இந்தியா சரணடைந்து விட்டதை புதிய காப்புரிமைச் சட்டம் வெளிப்படுத்துகிறது என அவர்கள் புகார் கூறினர்.

புதிய காப்புரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது எனக் கோரி இந்தியப் பிரதமர்,குடியரசுத்தலைவர் ஆகியோருக்கும் மனு அனுப்பியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஈராக்கில் துணைக்கவர்ணர் தீவிரவாதிகளால் கடத்தல்

(பாக்தாத்)

ஈராக்கில் துணைக்கவர்ணர் ஒருவர் உட்பட மூவர் தீவிரவாதிகளால் நேற்றுக் கடத்திச் செல்லப் பட்டுள்ளனர். ஈராக்கில் உள்ள சலாவுதீன் மாநிலத்தில் துணைக் கவர்ணராக இருப்பவர் கதான் ஹமாடா அவர்2அதிகாரிகளுடன் ஷியாமுஸ்லிம் மத குருவைச்சந்தித்துப் பேசுவதற்காக திக்ரித்நோக்கிச் சென்றார். லட்டிபியா என்ற இந்துக்கு அருகே அவர்கள் சென்ற போது சில தீவிரவாதிகள் தடுத்து நிறுத்தி கடத்திச் சென்ற இந்தத் தகவலை சலாவுதீன் ணர் ஹமத்ஹூம்மத் தெரிவித்தார்.



சூடானின் முதலாவது உப சனாதிபதி அலி ஒஸ்மன் மொகமட்தகா (இடது) சூடான் மக்கள் விடுதலை முன்னணித்தலைவர் ஜோன் கிறாங் (வலது) ஆகியோர் நைரோபியில் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்னர் ஒருவருக்கொருவர் சிரிப்பைப் பரிமாறு கின்றனர்.


# அமெ.நீர் மூழ்கிக் கப்பல் விபத்தில் ஒரு கடற்படைச் சிப்பாய் பலி; பலர் காயம்

## -பசுபிக் தளத்தில் சம்பவம்

(வோஷிங்டன்)

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பலொன்று விபத்துக்குள்ளானதில் ஒரு கடற்படைச் சிப்பாய் மரணமடைந்திருப்பதாகவும், பலர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பசுபிக் கடற் பிராந்தியத்தில் அமைந்துள்ள அமெரிக்காவின் மிகவும் முக்கியமான கடற் படைத்தளத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ள்து.

அணுசக்தி மூலம் இயங்கும் இந்த நீர் மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளானபோதுஅணு உலைகள் பாதிக்கப்படவில்லை யென்று அமெரிக்கா அறிவித்துள்ளது.



பலஸ்தீனிய சனாதிபதி வேட்பாளர் மகமூத் அபாஸ் (இடது) ரமாலியில் தனது ஆதரவாளர்களுடன் காணப் படுகின்றார்.

# சுனாமி பாதித்தோருக்கு நிமோனியா காய்ச்சல் மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிமோனியா காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறுகள் பரவ அதிக வாய்ப்பு இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து இயற்கை என்ற மருத்துவப் பத்திரிகையில் வெளியான தகவல்:- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வயிற்றுப்போக்கு மற்றும், கொலரா பரவும் அபாயம் இருப்பதாக உலக சுகாதாரஅமைப்பு உட்படப் பல்வேறு மருத்துவ அமைப்புக்கள் எச்சரித்தன. பேரழிவுகள் நிகழ்ந்த 15 நாட்களுக்குப் பிறகுதான் இவ்வகை நோய்களின் தாக்கம் வெளியே தெரியவரும். சுகாதாரமில்லாத குடிநீர் மற்றும், கழிவுகளின் பெருக்கத்தால் உருவாகும் பாக்ரீரியாக்கள் இந்த நோய்களுக்கு முக்கிய காரணமாக அமைகிறது. இருப்பினும், தகுந்த முன்னெச்சரிக்கை காரணமாக ஓரளவு அது கட்டுப் படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், நிவாரண முகாம்களில் நிலவும் நெரிசலால் நிமோனியா மற்றும்,சுவாசக் கோளாறுகள் அதிகம் ஏற்பட வாய்ப்புப் பெருகி வருகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளத்தின் அவசர நிவாரண உதவிக்குழு சுகாதார அதிகாரி ஹேகன் சேண்ட்பிளத் கூறுகையில் 'சுனாமி பாதித்த நாடுகளில் மழை, பாதுகாப்பற்ற தங்குமிடம் போன்ற காரணங்களால் நிமோனியா மற்றும் சுவாசக் கோளாறுகள் அதிகம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக எங்கள் மருத்துவக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.' என்றார்.

லண்டனைச் சேர்ந்த மருத்துவ உதவிக்குழு தகவல் தொடர்பாளர் மார்டின் பிராட்டன் கூறுகையில், 'இந்த நோய் தவிர்க்க முடியாதது என்ற நிலை ஏற்படக்கூடாது. கொலராவைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது போல இதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்கிறார்.

# குருகுலம் பராமரிப்பு இல்லத்தில் 507 சிறுவர்கள் பராமரிப்பு

## உதவியளிக்க விரும்புவோருக்கு அழைப்பு


(கிளிநொச்சி)

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப் பட்டுவரும் குருகுலம் பராமரிப்பு இல்லத்தில் 507 பேர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.**

1தொடக்கம் 7வயது வரையான 81 சிறுவர்கள் குருகுலம் பராமரிப்பு இல்லத்தின் குழந்தைகள் இல்லத்திலும், 8தொடக்கம் 12 வயது வரையான 216 சிறுவர்கள் சிறுவர் இல்லத்திலும், 12 வயதுக்கு மேற்பட்ட 210 பேர் குருகுலம் இல்லத்திலும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ் இல்லத்தில் 28 பணியாளர்களும்,10 பகுதிநேர ஆசிரியர்களும் சேவையாற்றி வருகின்றனர். போரினால், இராணுவ வன்முறைகளினால் ,தாய்தந்தை இழந்த தாயினை அல்லது தந்தை இழந்த சிறுவர்களின் நலவாழ்விற்காக மாதம் ஒன்றிற்கு 70 இலட்சத்து 84 ஆயிரத்து 324 ரூபாவிற்கு மேல் பராமரிப்புச் செலவாக செலவிடப்படுகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும், சமூகசேவை உள்ளம் கொண்ட புலம் பெயர்வாழ் தமிழர்களினால் வழங்கப்பட்டு வரும் நிதியுதவியினாலும் செயற்படுத்தப்பட்டுவரும் இவ்வில்லத்திற்கு நன் கொடையாளர்கள் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையின் கணக்கு இலக்கம் -C863 எனும் கணக்கு வைப்பு இலக்கத்திற்கோ அல்லது உருத்திரபுரம் பகுதியில் இயங்கிவரும் குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு நேரடியாகவோ தமது நன்கொடைகளை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)






*வாசுதேவ நாணயக்கார முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் அவர்களுடன் சென்று பார்வையிடுவதையும், அவர் பின்னர் முள்ளியவளை அவசரகால செயலணிக்குழு செயலகத்தில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தனுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காண்க.* (படம்–வரன்)

# வெடிபொருட்கள் காணப்படின் உடன் தொடர்பு கொள்க

முல்லைத்தீவில் வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் அனுசரணையுடன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தாம் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் முல்லைத்தீவு கரைச்சி குடியிருப்பில் 04 மிதிவெடிகளையும், உண்ணாபிலவில் 01 மிதிவெடியும், முல்லைத்தீவு மகாவித்தியாலய கிணற்றில் ஆர்.பி.ஜி எறிகணை ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.அவ்வாறு கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டால் தமது அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். முல்லைத்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமையிலும், வட்டுவாகல் பாலத்தடி ஆகிய இடங்களிலும் தற்காலிகமான நிலையங்கள் உள்ளதெனவும் அந்நிலையங்களுடன் தொடர் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (20,08)

## பிற்போடல்

12.01.2005 ஆம் நாள் புதன் கிழமை நடைபெறவிருந்த தமிழீழவைப்பகம்- ஊரகக் கிளை மாங்குளத்தின் சிறார் உண்டியல் பரிசளிப்பு நிகழ்வானது தவிர்க்கமுடியாத காரணத்தால் அன்று நடைபெறமாட்டாது என்பதையும், அந்நிகழ்வு எதிர்வரும் 19.01.2005ஆம் நாள் புதன்கிழமை நடைபெறும் என கிளை மேலாளர் அறியத்தந்துள்ளார்.



*முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதியில் 1964ஆம் ஆண்டு புயலின் போது புதையுண்டு போன பாலம் சுனாமி அனர்த்தத் துடன் வெளிப்பட்டமை தெரிந்ததே. அப்பாலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.*

# முல்லை பணிமனைக்கு சமூகம் தருக

(புதுக்குடியிருப்பு)

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோர்கத்தர்கள் அனைவரையும் இன்று காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கோரப பட்டுள்ளது.சுனாமி அனர்த்தம் காரணமாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுதல் சம்பந்தமான ஒன்று கூடலுக்கு சமுகம் அளிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (08)

# கடல் அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகளை வழங்கியோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

'சுனாமி' கடல் அனர்த்தத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான வடமராட்சி கிழக்கு மக்களின் அவசர தேவைகளுக்கு உதவுவதற்காக பெருமளவான மக்கள் தம்மால் ஆன உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.புதுக்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள செயலணிக் குழு செயலகம் அவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை பொருட்களை வழங்கியவர்களின் விபரங்கள் வருமாறு.

01-01-2005

இந்து ஆலயபரிபாலனசபை உடப்பு,சிலாபம், தியாகி அறக்கொடை நிலையம் நல்லூர், ஜெயக்குமார் 104 பிரதான வீதிதெனியாய கொழும்பு, சைவசமய பிரசார ஸ்தாபனம் வெள்ளவத்தை, நெஸ்பிறே கம்பனி அம்மன் களஞ்சியம் கிளி, பிரபாகரன் குடியிருப்பு, வவுனியா

02-01.2005

பணிப்பாளர் சபை சிறுவர் மனவளர்ச்சிப் பாடசாலை கோண்டாவில், ASB/HDU/NBA சர்வதேசம். அகில இலங்கை இந்துமாமன்றம் கொழும்பு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் இலங்கை, அன்பர்கள் சிறிலங்கா ரெலிக்கொம் கொழும்பு, சி.சந்திரசேகரம் பண்டாரிக்குளம் வவுனியா,

03-01.2005 நாகலிங்கம்அன்சன்ஸ் பெட்ரோல் நிரப்புநிலையம் சுன்னாகம்

04-01.2005 ரவீந்திரன் செல்வநந்தினி மாலியாறோட் புன்னாலைக் கட்டுவன் (தனியார் கனடா), சின்னப்பு தனபாலசிங்கம் ஆழியவளை தாளையடி (ஒஸ்லோநோர்வே), ஞானகலா சனசமூகநிலையம் குப்பிளான் மயிலங்காடு சேவாலங்காமன்றம் வைரவர் புளியங்குளம் வவுனியா, பழையமாணவர்சங்கம், வர்த்தகர் சங்கம் இந்துக் கல்லூரி கொழும்பு, இலங்கைத் தமிழ்ஆசிரியர் சங்கம உடுப்பிட்டிக்கிளை வடமராட்சி, மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை,

05-01.2005

நேருமாஸ்ரர் யாழ் கல்விவலயம் யாழ்,ஈ.ராஜா எஸ்.எம். நெய்யம்புலம் வல்வெட்டி, எஸ்.பீ.பரந்தன், தமிழீழ விளையாட்டுத்துறை கிளி, ஈ.எ.எஸ்.எல். லயன் நிவாரணப்பணி (க.சரவணன் 24 தெகிவளை கொழும்பு), பாஜ கிளி, ஆகியோரது விபரங்களே இவ்வாறு செயலணிக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. (லோ.தீ)

# "சுனாமிக்கு" பின் கடல் உணவு உண்ணலாமா?

இயற்கையின் சீற்றத்தினால் தென்கிழக்கு ஆசியாவின் பெரும்பாலான நாடுகள் பாரிய உயிர் இழப்புக்களையும் சொத்து இழப்புக்களையும் சந்தித்துள்ளன. இந்த இயற்கை அழிவில் இருந்து பாதிக்கப்பட்ட நாடுகள் மீண்டும் பழைய நிலைமைக்கு வருவதற்குப் பல ஆண்டுகள் எடுக்கும். இழந்த கட்டடங்களை சொத்துக்களைப் பிற நாடுகளின் உதவிகளின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். உயிர் இழப்புகளுக்கு என்ன செய்வது? குடும்பம் குடும்பமாய் இழக கப்பட்ட உயிர்களை தொலைந்த உறவுகளை யாரால் பெற்றுக் கொடுக்க முடியும். அதுவும் இர்ண்டு ஆண்டு காலப் போர் ஏற்படுத்திய உளவடுவோடு வாழ்கின்ற வடக்கு கிழக்கு தமிழ் மக்களிற்கு இது மேலும் ஒருபடி வேதனையை ஆழமாக விட்டுச்சென்றுள்ளது.

தமிழ் மக்களின் பிரதான ஜீவனோபாயமான கடற்றொழிலிற்கே ஆப்பு வைக்கக் கூடிய அளவில் சுனாமி வடக்கு-கிழக்கு மாகாணங்களை நன்றாகவே தாக்கியுள்ளது. கடந்த 20 ஆண்டுகால யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட அமைதிச்சூழலோடு பொதுமக்கள் கொஞ்சம் விட்ட நிம்மதிப் பெருமூச்சும் சுனாமியூடே அடிபட்டு போய்விட்டது. எஞ்சியிருந்த உறவுகளும் தேடிய சொத்துக்களும் கணப்பொழுதில் காணாமல் போயின.

கடற்கொந்தளிப்புக்குப் பின்னர் எமது மக்கள் மத்தியில் கடல் உணவுகளை உட்கொள்வது தொடர்பாக பல்வேறு கருத்துக்களும் வாதப்பிரதிவாதங்களும் பொய்யான பிரச்சாரங்களும் உள்ளன. இது பற்றி மருத்துவர் என்ற முறையில் சிலவற்றை மக்களிற்குத் தெளிவுபடுத்த வேண்டும். கடல் வாழ் உயிரினங்களில் மனிதர் உண்பது சிறிய மீன்களையும் நண்டு,இறால், கணவாய், ஆமை போன்றவற்றையுமே பொதுவாக ஊனுண்ணி வகைக்குரிய திமிங்கலங்கள் பெரியசுறா போன்றவற்றை உண்பதில்லை.

நாம் உட்கொள்ளும் அனைத்து கடல் உணவுகளும் தாவரங்களை மட்டும் உண்ணும் தாவர உண்ணி உயிரினங்களேயாகும். இவை பொதுவாக கடலில் உள்ள பாசிகள், அல்காக்கள்-போன்ற பச்சைத் தாவர வகைகளையே உண்கின்றன. அரிதாக சில மீன்வகைகள் ஊன் உண்ணலாம். கடல் கொந்தளிப்பிற்குப்பின்பு பலபேர் காணாமல் போயுள்ளனர் என்பதுவும், கடலில் சில உடல்கள் மிதந்து கரைசேர்ந்தது என்பதுவும் உண்மையே. காணாமல் போனோர் எல்லோரும் சமுத்திரத்திற்குள் அகப்பட்டிருக்க வாய்ப்பில்லை. இவ் உடல்கள் கடல் அலைகளோடு தள்ளுண்டு எங்காவது கரையொதுங்கியிருக்கலாம். உடல்கள் கடல் நீரின் அதிக உப்பு செறிவால் அழுகி பழுதடைவதற்கும் சாத்தியமில்லை. பொதுவாக நோக்கினால் கடலில் இறந்தஉடல்கள் விடுபடுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்றே குறிப்பிடலாம். இவ்வாறாக விடுபட்ட உடல்களை ஊனுண்ணி வகைக் குரிய சுறா, திமிங்கலம் போன்ற பாரிய மீன்கள் சாப்பிடுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதேயன்றி சிறிய மனிதர் உண்ணும் கடல் மீனினங்கள் சாப்பிடுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. எனவே மனிதர் உண்ணும் கடல் உயிரினங்களைக் குறித்து அனாவசியமாகப் பயப்படத்தேவையில்லை.

அவ்வாறாக கடல் உயிர்கள் பிணங்களை உண்ணலாம் என்று யோசிப்பவர்களும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும் நாம் அவற்றின் சதைப் பகுதியினை மட்டுமே உண்ணுகின்றோம். மீன் இனங்களின் குடல் பகுதிகளை உண்பதில்லை. எவ்வாறாறெனினும் கொதிக்க வைப்பதன், பொரிப்பதன்மூலம் கிருமிகள் கொல்லப்படும்.

கடல் நீர் ஊடாக தொற்று நோய்கள் பரவலாம் என்பதும் அநாவசியமான சந்தேகமன்றி அவற்றில் உண்மைகள் இல்லை. எமக்கு ஏற்படுகின்ற தொண்டை நோ போன்ற உபாதைகளுக்கு உப்பு நீரை நுண்ணுயிர் கொல்லியாகப் பாவிக்கின்றோம். கடல் நீரின் அதிக உப்பு செறிவு காரணமாக தொற்று நோய்களை உருவாக்கும் நுண்ணங்கிகள் வாழ்வதற்கும் அவற்றுக்கூடாக நோய்த் தொற்று பரவுவதற்கும் சந்தர்ப்பம் இல்லை.

சில மக்கள் மனோ ரீதியாக ஏற்படும் "அருவருப்பு" காரணமாக இவற்றை ஒதுக்கலாம், அல்லது சாப்பிடாமல் விடலாம். இவ்வாறானவர்களிடையே காலப்போக்கில் குறையூட்ட நோய்கள் ஏற்படலாம். எனவே கடல் உணவு உண்ண மனமில்லாதவர்கள் அவற்றிக்கூடாக கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்துக்களை பெற்றுக் கொள்ள நன்னீர் மீன்கள், சோயா உணவுகள், தானியங்கள், பால், முட்டை இறைச்சி என்பவற்றை தவறாது உண்ண வேண்டும்.

மக்களை உளதாக்கத்திலிருந்து மீட்டெடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நாம் அவசர அவசிய பணியாக தொழிலாளருக்குரிய மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களை உடனடியாக அவர்களுக்குரிய தொழில்களை ஆரம்பிக்க உதவ வேண்டும் அவர்களது உளநெருக்கீடுகள் அற்றுப்போக அவர்களது சிந்தனையை அவர்கள் செய்த தொழிலுக்குள் செலுத்துவதற்கு உதவுவதே மிகமிக அவசியமானது. தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட அவர்களது பொருளாதார பலம உயர்வடைய சிதைவடைந்த தங்கள் மனங்களையும், சீரழிந்த தமது வாழ்விடங்களையும் இயல்பாகவே, நிரந்தரமாகவே சீரமைத்துவிடுவார்கள்.

மீண்டும் மீன்பிடித் தொழிலை ஆரம்பித்து தகுந்த சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதே 'சுனாமி'யினால் பாதிக்கப்பட் மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய மறுவாழ வுப் பணியாக அமையும். சம்பந்தப்பட்ட சகலதரப்பினரும் உடனடியாக கடற்றொழிலை ஆரம்பித்து பாதிக்கப்பட்ட மக்களது ஜீவனோபாயத்தை தொடக்கிவிடுவதில் வெற்றிகாண முன்வர வேண்டும். ஏனையோர் கடல் உணவுகளை எவ்வித சந்தேகமும் அருவருப்புமின்றி உண்ண முன்வரவேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**பா.யூடிறமேஸ் ஜெயக்குமார்.**

# யாழ். இல் சுகாதாரம் பேணும் உதவிகளை ஒருங்கிணைப்புச் செயலகமூடாகவே செய்யவேண்டும்!

## வைத்தியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். வடமராட்சியின் கரையோரப் பகுதி வாழ்மக்களுக்கான சுகாதாரம் பேணும் உதவிகளை வழங்க முன்வருவோர் தமது உதவிகளை வடமராட்சியில் உள்ள சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார சேவை ஒருங்கிணைப்புச் செயலகமூடாகவே தமது உதவிகளை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுனாமி கடற் பேரனர்த்தங்களால்பாதிக் கப்பட்ட மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பாக கடந்த சனிக்கிழமை வடமராட்சியிலுள்ள அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்புச் செயலகத் தில் இடம்பெற்ற முக்கிய கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

தமிழீழ சுகாதாரசேவையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி வைத்திய கலாநிதி குணாளன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உளநலப் பணிக்குழுத் தலைவர் வைத்திய கலாநிதி சொலமன், மருத்துவப் பேராசிரியர் சுரேந்திரகுமார், வைத்திய கலாநிதி சிவசங்கர் உட்பட பல வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டு நடத்திய சந்திப்பின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குவதில் ஒருங்கிணைப்பு கட்டமைப்பு முறைகள் பின்பற்றப்படாமையால் பல்வேறு அமைப்பினராலும் பரவலாக சுகாதாரம் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை மக்களைத் திருப்திகரமாக சென்றடையாத தன்மையைச் சுட்டிக்காட்டியே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (33)

# பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்திற்கு சுனாமியால் 45 இலட்சம் ரூபா நட்டம்

வடமராட்சி வடக்கு கடற் பகுதியில் கடலனர்த்தத்தினால் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு நாற்பத்தைந்து இலட்சம் ரூபா சொத்தழிவு ஏற்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதியில் இருந்த ஆறு சங்கக் கிளைக் கட்டடங்கள் முழுமையான சேதங்களுக்கு உள்ளானதோடு அங்கிருந்த விற்பனைப் பொருட்கள் நிவாரணப் பொருட்கள் என்பனவும் அழிந்துள்ளன. குறிப்பாக பொலிகண்டி கரை, சக்கோட்டை, இன்பருட்டியில், இரண்டு கிளைகள், சுப்பர் மடம், முனை ஆகியவையே அழிந்துள்ளன.

மேலும் இச்சங்கத்தின் விற்பனையாளரான கெருடாவிலைச் சேர்ந்த கி.ஆறுமுகம் (வயது-52) என்பவர் விடுமுறையில் முல்லைத் தீவுக்குச் சென்றிருந்த போது சுனாமி அனர்த்தத்தால் இறந்துள்ளதாக வும் மேற்படி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (45)

# உரியவர்களின் அனுமதியின்றி நலன்புரி நிலையங்களுள் நுழையக் கூடாது

## யாழ். பொலிசாருக்கு பொலிஸ் அதிகாரி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி கடற்பேரலையின் தாக்கங்களால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அகதி முகாம்களுள் சிறிலங்கா பொலிசார் எதுவித காரணங்களுக்காகவும், உரியவர்களின் அனுமதிகள் இன்றி உட்பிரவேசிக்கக் கூடாது என சிறிலங்கா பொலிசாரின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி வணகுரு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

கடற்பேரனர்த்தங்களால் அல்லலுற்று இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களுள் நுழையும் பொலிசார் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் இவ்வாறான முகாம்களில் தங்கியுள்ளோரிடையே விசனத்தை உருவாக்கியுள்ளது.

இதனால் அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கும் பொலிசாருக்குமிடையே பெரும் முறுகல் நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்டி மக்கள் தெரிவித்து வரும் ஆட்சேபக் கருத்துக்களை அடுத்தே இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ள யாழ் மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் மீது அடாவடித்தனங்களைப் புரியும் பொலிசார் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார். (33)

# பண உதவி

(நல்லூர்)

கந்தர்மடம் கே/102 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஊரக வளர்ச்சிப் பேரவையினர் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென ஒரு தொகைப்பணத்தைக் கையளித்துள்ளனர்.

நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.பாலகுமாரிடம் பணம் கையளிக்கப்பட்ட இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (41)

# பாதிக்கப்பட்ட மாணவர்க்குதவ த.க.மேம்பாட்டு பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டைத் தாக்கிய சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்க முன்வருமாறு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய 'சுனாமி' கடற்பேரனர்த்தத்தால் தமது கல்வி உடமைகள், கல்வி உபகரணங்களை இழந்து பல ஆயிரக்கணக்கிலான கரையோரப் பகுதி மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இன்றி ஏதிலிகளாக உள்ளனர். இவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான வசதி வாய்ப்புகளை உருவாக்குவதற்கான கல்வி உபகரணம் மற்றும் கொப்பிகள், புத்தகங்கள் போன்றவற்றை வழங்க முன்வருமாறு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர், வர்த்தகர்கள், அரசசார்பற்ற அமைப்புகள், புலம்பெயர் உறவுகள், மாணவர்கள் எனப்பலருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். (33)

# பொதுமக்கள் விழிப்புடன் இருந்து கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க வேண்டும்!

## கைதடி மக்களுக்கு பிரதேச தே. எ. பேரவை கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடிப் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து இடம் பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருந்து இவற்றைத் தடுக்க வேண்டுமெனக் கைதடிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இரவு வேளைகளில் நடமாடும் சந்தேகத்திற்குரிய நபர்கள் குறித்தும் மக்கள் எச்சரிக்கையுடன் இருப்பதுடன், அப்படி சந்தேகப்படும் நபர்கள் குறித்தும் இரண்டு மூன்று பேராகத் திரியும் இப்படிப்பட்ட நபர்களை அயலவர்கள் துணையுடன் விசாரித்து சந்தேகம் வலுக்கும் பட்சத்தில் அவர்களைப் பிரதேச அரசியல்துறை பணிமனையில் ஒப்படைக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் மயக்க மருந்தைப் பயன்படுத்தி வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர்களால் பல லட்சம் ரூபாய் மதிப்புடைய நகை, பணம் கொள்ளையிடப்பட்டதால் இப்பிரதேச மக்கள் பதட்டம் அடைந்திருப்பதுடன் விழிப்புக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில இடங்களில் கொள்ளையர்கள், மயக்க மருந்து பயன்படுத்தி ஸ்பிறே செய்தே பொருள், பணங்களை கொள்ளையடித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடமராட்சியில் வீதியைத்திருத்த பொது அமைப்புக்கள் கோரிக்கை

"சுனாமி" கடற்பேரலை காரணமாக தடமே தெரியாது சிதைந்து போயிருக்கும் யாழ்.வடமராட்சியின் கரையோரப் பிரதேச வீதிகளைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கைகளை எடுக்குமாறு வடமராட்சி பொது அமைப்புகள் ஒன்றியத்தினர் யாழ் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதியின் வீதிகள் கடல் நீரினால் அரித்துச் செல்லப்பட்டிருப்பதனால் சேதமடைந்த கிராமங்களில் புனரமைப்புப் பணிகள் தடைப்படும் அபாயத்தைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# மின் இணைப்புக் கேட்கும் மக்களுக்கு வழங்க முடியாத நிலையில் யாழ்.மி.சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு முழுவதும் உள்ள பகுதிகளுக்கு அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள மின்சார சபைக்கு பொதுமக்கள் புதிய மின் இணைப்புக் கேட்டும், பழைய மின் இணைப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுத்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் பணத்தைக் கட்டியும் இது வரை மின் இணைப்பை பெற முடியாமல் உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு பதில் சொல்ல முடியாத நிலைமையில் தாங்கள் உள்ளதாக மின்சார சபை உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரச துறைசார் நடவடிக்கைகள் மூலம் இவ் வேலைத்திட்டங்களுக்கு தேவையான மின்சார மூலப் பொருட்களை மட்டுப்படுத்தியிருப்பதால் யாழ்.குடாநாட்டில் மக்களின் மின் தேவைகளை பூர்த்திசெய்வதில் கடந்த ஆறு மாதங்களாக பாரிய சிக்கல்களை மின்சார சபைகள் எதிர் நோக்கியுள்ளதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது குறித்து மக்களுக்கு உண்மை நிலையை விளக்குவதுடன் தினம் தினம் மின்சார சபைக்கு வந்து உடனே இணைப்பை வழங்குமாறு கூறும் பெருந்தொகையான மக்களுக்கு இந்த இடைவெளி குறித்து விளக்குவதே மின்சாரசபை அதிகாரிகளுக்கு இன்றைய வேலையாக உள்ளதாக அவர் வேதனையுடன் குறிப்பிட்டார். (28)

# தென்மராட்சி பிரதேச சபையில் ஊழியர்கள் பணியாற்ற இட நெருக்கடி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச சபை அலுவலகத்தில் இட வசதி இன்மையால் பணியாற்றும் ஊழியர்கள் அவதிப்படுவதாக தென்மராட்சி பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

அலுவலக செயற்பாடுகளுக்குப் போதுமான அளவில் இட வசதி இன்மையால் ஒவ்வொருதுறைசார் ஊழியர்களுக்கும் அருகருகே இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும் புதிதாக நேற்று முன்தினம் முதல் பத்து பட்டதாரிகள் புதிதாக பிரதேச சபைக்கு நியமனம் பெற்று வந்துள்ளதால் இட நெருக்கடியை இவ் அலுவலகம் கூடுதலாக எதிர் நோக்கியுள்ளது. இவற்றை சீர்படுத்துவது பற்றியும் அலுவலக விஸ்தரிப்பு பற்றியும் தான் கூடுதலாக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த அவர் பிரதேச சபையின் பணிகள் பொது மக்களுக்கு நிறைவாக கிடைக்கும் விதமாய் ஊழியர்கள் பணியாற்றுவதும் கடமையில் ஈடுபடுவதும் மிகவும் முக்கியம் வாய்ந்தது என்றார் அவர். (28)

# படையினர் அப்பக்கடை அமைக்க மீசாலை மக்கள் எதிர்ப்பு

(தென்மராட்சி)

மீசாலைப் பகுதியிலுள்ள சிறிலங்காப்படைமுகாமுக்கு அருகில் சாலை ஓரத்தில் நேற்று முன்தினம் முதல் அமைக்கப்பட்டு வரும் அப்பக்கடை குறித்து பொது மக்கள் தங்களது கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

இந்த அப்பக்கடை அமைப்பதன் மூலம் கலாச்சார சீரழிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஆபாசப் படங்கள், போதைவஸ்துகள் என்பனவற்றை விநியோகித்து இளைஞர் சமூகத்தை நாசப்படுத்தவே படையினர் திட்டமிட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னால் புத்தூர் சந்தியில் சமூக விரோத சீரழிவுக்கு மையத்தளமாக செயற்பட்டுவந்த அப்பக்கடை ஒன்று பொது மக்களால் தீவைத்து எரிக்கப்பட்டது தெரிந்ததே. (28)

# பெறுபேறுகள் வெளியாகின

பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் கற்கை நெறிகளில் ஒன்றான பண்பாட்டியலில் முதுகலைமாணி கற்கைநெறியின் இறுதிப் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. கற்கை நெறியினை மேற்கொண்ட மாணவர்கள் தம் பெறுபேறுகளை உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என அறியத் தரப்படுகின்றது.

மகளிர் படையணிகளின் வளர்ச்சிக்கு ஆழமான ஒரு தளம் அமைத்துக் கொடுக்கப்பட்டபோது அதைச் சரியாக விளங்கிக்கொண்டு செயல்வேகம் காட்டி எம்மை நிமிரவைத்த எமது முதற்தளபதி மேஜர் சோதியா அவர்களின் நினைவு தினம் இன்றாகும். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பின் அவசியத்தைத் தீர்க்கதரிசனப்பார்வையுடன் அறிந்துகொண்ட எமது தலைமை, பெண்கள் பலத்தில் நம்பிக்கை கொண்டதன் விளைவாக இன்று தமிழீழப் பெண்கள் உலக அரங்கில் உயர்வாக நோக்கப்படு





# தலை நிமிர்ந்த சந்ததிக்குப் பலம் சேர்த்த தளபதி

# மேஜர் சோதியா

கின்றனர். எழுச்சியும், விழிப்புணர்வும் கொண்ட பெண்கள் பெருமளவில் ஆயுதப் போராட்டத்தில் பங்களிப்புச் செய்பவர்களாகவும் சமூகமட்டத்தில் இருக்கும் பெண்கள் கூட இன்று போற்றத்தக்க செயற்பாட்டாளர்களாகவும் வளர்ந்து நிற்கின்றனர். இன்றைய சூழலில் பெண்களின் ஆற்றல்களை உரிய முறையில் வெளிப்படுத்தக் கூடியதாக ஒரு வல்லமையின் வழிகாட்டலில் தம்மை வளர்த்துக் கொண்டதாகப் பெருமைப்படும் பெண்கள் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர் மேஜர் சோதியா அவர்களையாகும்.

போரியல் ரீதியில் மகளிர் அணி பல்வேறு கிளைகளாக வளர்ந்து நிற்கும் இன்றைய காலகட்டத்தின் அத்திவாரமாக நின்ற எங்கள் தளபதியை மகளிர் அணியினர் நன்றி உணர்வோடு நினைவு கூருகின்றனர். இந்நாளில் மேஜர் சோதியா அவர்களின் பல்வேறு பரிணாமச்செயல் திறன் ஆற்றலும் எம்மால் மீட்டுப்பார்க்கப்பட வேண்டியது. அவரின் செயல் திறனில் இருந்து நாம் கற்றுக்கொண்டவை பல. இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியவையும் ஏராளம். அன்றைய புதிய போராளிகள் உள்வாங்கப்பட்ட சூழல் வித்தியாசமானது. அதிலிருந்து வந்தவர்களை தனது நேர்மையாலும் உண்மையான நேசிப்பாலும் அன்பான, கனிவான, கண்டிப்பான நடத்தையாலும் கவர்ந்தவர். குடும்பப்பிரிவின் துன்பம் தெரியாமல் அன்றைய போராளிகள் வளர வாய்ப்பளித்தவர். ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட முறையில் நட்புறவுடன் உரையாடுவதன் மூலம் ஒவ்வொரு போராளியினதும் குடும்பப் பின்னணிகளை அறிந்துகொண்டு அவரவர்க்கு ஏற்றபடி இதமாக நடந்து கொண்டவர். தன்னையும் அவர்களுள் ஒருவராக்கி நட்புரிமையுடன் உறவாடும் அந்த இயல்பால் போராளிகள் ஒவ்வொருவரும் தம்மை முழுமையாக சோதியா அவர்களின் முன் ஒப்புவிப்பவர்களாக இருந்தனர். அவரது நேர்மைக்கும், கண்டிப்புக்கும் அத்தனை பேரும் அடிபணிந்து போகும் அளவிற்கு மனங்களை ஆழமாக ஊடுருவி இருந்தவர். குற்றம் இழைத்துவிட்டால் அவரின் முகத்தை நேருக்கு நேர் சந்திப்பதற்குத் திராணியற்றவர்களாக, பாவமன்னிப்புக் கோருபவர்கள் போல் தாம் செய்தவற்றை அவர் முன்னால் அவர்கேட்கும் முன்பே ஒன்றும் விடாமல் உரைத்துவிடும் இயல்பு கொண்டவர்களாகவே அணியினர் அவரால் வளர்க்கப்பட்டனர். அவரின் இந்த வாழ்க்கை முறை என்றென்றும் எமது வளர்ச்சிக்குப் பாடமாக அமையவேண்டிய ஒன்றாகவே அனைவராலும் நினைவிற் கொள்ளப்படுகிறது.

புதிய சூழலைப் புதிய போராளிகள் மனக்குழப்பம் இன்றி இயல்பாக எதிர்கொள்வதற்கு ஏற்றவாய்ப்பை மேஜர் சோதியா அவர்கள் உருவாக்கிக்கொடுத்தவர். அதனையே ஒரு முன்னுதாரணமாக எடுத்து பின்னாளில் வந்த அணித் தலைவர்கள் செயற்படவும் உறுதுணையாக இருந்தவர். போராட்ட உணர்வும், தலைவரின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்ப அணியினரை நகர்த்திச் செல்லும் பாங்கும் அணித்தலைவர்களிற்கும் அணியினருக்கும் எவ்வாறு வளர்ச்சிபெற வேண்டும், அதற்காக எவ்வாறான இயல்புடன் நாங்கள் செயற்படவேண்டும் என்பதும் சோதியா அவர்களின் வழியில் தான் மகளிர் அணியினருள் ஊடுருவியது. தலைவரின் அறிவுரைகளை ஆழமாக விளங்கிக் கொண்டு செயலாக்கி, புதிய ஒரு நம்பிக்கையுடன் மகளிர் தளபதிகள் பலர் வளர வழியமைத்த எமது தளபதி

இன்னும் நீண்ட நாட்கள் எங்களுடன் இருந்து எம்மை நெறிப்படுத்தி இருக்க வேண்டியவர். மிகக்குறுகிய காலத்தில் மிகவும் வேகமாக வளர்ச்சிபெற்று மிகவிரைவாக தலைவரின் எண்ணத்தைச் செயலாக்கும் திறன் பெற்ற இவர் மிக விரைவிலே எம்மிடம் இருந்து பிரிக்கப்பட்டது எமது துர்அதிர்ஷ்டமாகவே எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும் எந்த ஒரு திட்டமிடலுக்கும் செயற்பாட்டு வேகத்துக்கும் மகளிர் அணியினரால் மானசீகமாகப் போற்றப்படும் தளபதியாக மேஜர் சோதியா அவர்கள் விளங்குகின்றார்.

மகளிர் அணியின் வளர்ச்சியின் சீரான போக்கிற்கு சிறந்த தளபதியைத் தேர்வு செய்திருப்பதாக எண்ணிப் பல பொறுப்புக்களை நம்பி ஒப்படைத்திருந்த வேளை, மேஜர் சோதியாவை நோயின் காரணமாக நாம் இழந்து நின்றோம். அப்போது அவரின் செயற்பாட்டு வேகத்தையும் திறமையையும் தம்முள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற உறுதி அன்று அவருடன் இருந்தவர்களிடம் வலுப்பெற்று தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

மேஜர் சோதியாவின் செயற்பாடு மகளிர் அணியின் வளர்ச்சிக்கு வித்திட்டதன் விளைவாக அவரது பெயரில் படையணி தோற்றுவிக்கப்பட்டது. அவர் பெயர் தாங்கிய படையணி அவர் நினைவுடன் பலகளம் கண்ட திருப்தியுடனும் பெருமையுடனும் அவரை நினைவில் கொள்கிறது. அத்துடன் பல்வேறு களமுனைகளிலும் தமது படையணியின் வேகமான வெற்றி நோக்கிய செயற்பாட்டிற்காக ஆங்காங்கே களங்களில் விழிமூடிப் போனவர்கள் பலர். மேஜர் சோதியா அவர்களுடன் படையணியின் வளர்ச்சிக்கு வித்தாகிப் பக்கபலமாக தோன்றாத் துணையாக இருக்கும் நானூற்று ஐம்பத்தேழு மாவீரர்களையும் இதயபூர்வமாக அஞ்சலித்து அவர்களது நினைவுகளுடனும். கனவுகளின் நிறைவேற்றத்துக்காகவும் தொடர்ந்து உழைக்கும் உறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றது.



மேஜர் சோதியா அவர்களின் நினைவுகள் தொடர்ந்து மகளிர் அணிகளை வளர்ச்சிப் போக்கில் வழிநடத்திக் கொண்டிருக்கின்றது. அதேவேளை அவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற இந்த நாள் பிரத்தியேகமாக நினைவுகொள்ளப்படுகின்றது. காலம் தோறும் வெவ்வேறு களச் சூழ்நிலைகளில் நினைவு கூரப்பட்ட இந்நாள் இம்முறை எமது மாவீரர்கள் எந்த உறவுகளை நேசித்தார்களோ அந்த உறவுகளைப் பெருமளவில் இழந்து நிற்கும் சூழலில் நினைவு கொள்ளப்படுகின்றது. இயற்கைப் பேரனர்த்தத்தினால் எம் உறவுகளைப் பெருமளவில் இழந்து உருக்குலைந்துபோன உணர்வுடன் சொல்ல முடியாத சோகத்தில் தவிக்கின்ற வேளையில் எமது தளபதியும் ஏனைய மாவீரர்களும் நினைவு கூரப்படுகின்றனர். இன்றைய சூழலில் எஞ்சியுள்ள அனைவருமே எமது உறவுகளாகப் பின்னிப்பிணைந்த உணர்வுடன் எந்தவிதபேதமும் இன்றி உறவு கொள்ள வேண்டும். இலகுவில் மாற்ற முடியாத, மறக்கமுடியாத சோகத்தை எமக்குச் சொந்தமாக்கியுள்ள இந்தச் சூழலில் நாங்கள் நிதானமாக தன்னம்பிக்கையுடன் தலைநிமிர வேண்டிய தேவையுள்ளது. இதனையே எமது மாவீரர்களும் வேண்டி நிற்பார்கள் என்ற உண்மையை உணர்ந்து இனவிடுதலைக்கு ஏற்ப நாம் விரைவில் மீளவேண்டும். இதுவே இன்றைய எமது தேசத்தின் மிக அவசியமான தேவையாகவும் உள்ளது. மாவீரர்கள் நினைவு கொள்ளப்படும் நிகழ்வுகள் புதிய எழுச்சியைத் தோற்றுவிப்பதே வழக்கமானதாகும் . அந்தவகையில் புதிய எழுச்சியுடன் எழும் இந்நாளில் அவர் தாங்கிய கனவுகளுடன் அவரையும்அனைத்து மாவீரர்களையும் இயற்கை அனர்த்தத்தில் எம்மைப்பிரிந்த உறவுகளையும் இதயபூர்வமாக அஞ்சலித்து எமது தேசவிடுதலைப் பாதையில் உறுதியாக பலம் பெறுவதே எமது கடமையாகும்.

ஆக்கம் - செல்வி

# கிளி.மாவட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான பாடசாலை முகாமைத்துவ செயலமர்வு

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி,பளை, கரைச்சி, கண்டாவளை கோட்டத்தைச் சேர்ந்த 97 பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களிற்கான பாடசாலை மட்ட முகாமைத்துவச் செயலமர்வு கடந்த 8ஆம் 9ஆம் தினங்களில் வட்டக்கச்சி ம.வி.இல் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இப் பயிற்சிச் செயலமர்வில் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட 200 பேர் கலந்து கொண்டனர். செயலமர்வில் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்களிற்கான உணவுகள் வலயக்கல்விப் பணிமனையின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டது.

இச் செயலமர்வில் எதிர்வரும் 5 வருடங்களிற்கான திட்டங்களும் 2006 ஆம் ஆண்டிற்கான விசேட செயற் திட்டமும் எவ்வாறு தயாரிக்கப்படவேண்டும் என விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டது. இச்செயற்பாட்டு திட்டமிடலில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன், கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மார்க்கண்டு, விஞ்ஞான சேவைக்கால ஆலோசகர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதி நாளில் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அதிபர்களுடன் கலந்துரையாடினார்.

(12,34)

# வீட்டு மின் இணைப்பு கற்கை நெறி உதவு தொகை வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையால் பூநகரி அரச தொழிற்பயிற்சி நிலையத்தில் சென்ற வருடம் (2004) நடாத்தப்பட்ட வீட்டு மின் இணைப்பு கற்கை நெறியினை கற்ற கற்கையாளர்கள் அனைவரிற்கும் பயிற்சிக்கால உதவு தொகை வழங்க வேண்டியுள்ளதால் கற்கையாளர்கள் மக்கள் வங்கி கிளிநொச்சி கிளையில் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கணக்கு வைப்பு ஒன்றினை ஆரம்பித்து வங்கிக் கணக்கு இலக்கம், கற்கையாளர்களின் பெயர் என்பனவற்றை கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவன கிளிநொச்சி பிரதான நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலைய வீட்டு மின் இணைப்பு கற்கை நெறி விரிவுரையாளர் ச. சபேசன் வேண்டியுள்ளார்.

இக்கற்கை நெறியினை 18 கற்கையாளர்கள் கற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## வீரர்களில் வித்தியாசமானவர்

கில்லி... என அவுஸ்திரேலிய வீரர்களால் செல்லமாக அழைக்கப்படும் கில்கிறிஸ்ட் மற்ற அணி வீரர்களுக்கோ இவரது பெயரைக் கேட்டாலே கிலி ஏற்பட்டு விடுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது சமீபத்திய சிட்னி டெஸ்டில் அப்பட்டமாக வெளிப்பட்டது. பொதுவாக டெஸ்ட் போட்டிகளில் 90 ஓட்டங்களை எட்டி விட்டாலே துடுப்பாட்ட வீரர்கள் மனதில் சதம் அடிக்கும் ஆசை பிறந்துவிடும். இதனால் துடுப்பாட்ட வீரர் நிதானத்துக்குப் போய் விடுவர். ஒவ்வொரு பந்தையும் தட்டி விடவே பயப்படுவர். இவர்களுக்கு மத்தியில் கில் கிறிஸ்ட் மிகவும் வித்தியாசமானவர். இவர் சிட்னி டெஸ்டில் பாகிஸ்தானின் முகமது ஆசிப் பந்து வீச்சில் தொடர்ந்து மூன்று சிக்சர் அடித்து சதத்தை எட்டியது மறக்க முடியாத விடயம். 120 பந்துகளில் 113 ஓட்டங்களை விளாசிய இவருக்கு இந்தச் சதம் கொஞ்சம் விசேடமானது. வங்கதேசம் தவிர ஒன்பது



டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளுக்கு எதிராக சதம் அடித்தவர் என்ற பெருமையைப் பெற்ற கில்கிறிஸ்ட் இது தவிர டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த விக்கெட் காப்பாளர் என்ற புதிய சாதனையையும் படைத்தார்.

65 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 4,109 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதன் சராசரி 52. 67. இதில் 13 சதம், 19 அரைச் சதம் அடங்கும். விக்கெட் காப்பாளராக 253 பிடிகளையும், 27 ஸ்டம்பிங்குகளையும் செய்துள்ளார்.192 ஒரு நாள் போட்டிகளில் 6,661 ஓட்டங்களைக் குவித்துள்ளதுடன் 287 பிடிகளையும், 39 முறை ஸ்டம் அவுட்களையும் செய்துள்ளார்.

ஒரு நாள், டெஸ்ட் என்ற வித்தியாசம் பார்க்காமல் விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்துவதுதான் கில்கிறிஸ்ட்டின் சிறப்பம்சம். இதனால் தான் 'கிரிக்கெட் பைபிள் விஸ்டன்' இவரை சிறந்த விளாசல் வீரராக போற்றுகிறது. இவர் 100 பந்துகளுக்கு 80 ஓட்டம் எடுப்பதாக விஸ்டன் கணக்கிட்டுள்ளது.

ஆட்டமிழப்பு எனத் தெரிந்தால் நடுவரின் முடிவுக்காகக் காத்திராமல் தானாகவே வெளியேறும் கில்கிறிஸ்ட் அதிகம் அலட்டிக் கொள்ளாதவர். இவர் சிட்னி சதம் பற்றி கூறுகையில்,

"சதத்தை வைத்து எனது திறமையை மதிப்பிட்டு விடாதீர்கள். அணிக்காக விளையாடுகிறேன். அவ்வளவுதான்'' என்றார் அடக்கத்துடன். அதேநேரத்தில் அணித் தலைவர் பொண்டிங் இவரைப் புகழ்ந்து தள்ளினார். "வாழ்க்கையில் இப்படிப்பட்ட வீரரை ஒரு முறைதான் பார்க்க முடியும். இவரது துடுப்பாட்டத்தை ரசித்துக் கொண்டே இருக்கலாம். விக்கெட் காப்பாளர் டெஸ்டில் 13 சதம் அடிக்கிறார் என்பது நம்ப முடியாத விடயம்'' என்றார் பொண்டிங்.

எதிரணி வீரர்களைக் கொச்சைப்படுத்துவதிலும் ஏளனம் செய்வதிலும் பெயர் பெற்ற அவுஸ்திரேலியர்களின் களங்கத்தை கில்கிறிஸ்ட்டினால் துடைக்க முடியுமா?

## பலத்துக்கான பலப்பரீட்சை



இங்கிலாந்துக்கு எதிராக கேப்டவுனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியை வெற்றி கொண்ட தென்னாபிரிக்க அணி தனது தொடர் தோல்விக்கும் சரிவுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

உலகில் அசைக்கமுடியாத அணியாக இன்று வரை வலம் வரும் அவுஸ்திரேலிய அணிக்கு அடுத்த படியாக தென்னாபிரிக்க அணி கருதப்பட்டு வந்தது. அப்போது அவ்அணியில் காலஞ்சென்ற முன்னாள் அணித் தலைவர் குரேஞ்சே, வேகப்பந்து வீச்சாளர் டொனால்ட் சகலதுறை வீரர் குளுஸ்னர், உலகின் தலைசிறந்த களத்தடுப்பாளர் ஜொன்டிரொட்ஸ் உட்பட கலிஸ் என அணியில் அங்கம் வகித்ததும் அவ்வணி பல சவால் மிகு வெற்றிகளை பெற்று இரண்டாவது இடத்தை தக்கவைக்க காரணமானது.

தற்போது அந்நிலை அவ் அணியில் இருந்து மறைந்து போய் விட்டதுடன் வெற்றிக்காக ஏங்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இது அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஓய்வு பெற்றதும் தற்போதுள்ள வீரர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளும் காரணமாக அமைந்து வருவதாக கூறப்படுகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டித்தொடர் தென்னாபிரிக்காவுக்கு சவால் மிகு ஒன்றாக அமைந்துவிட்டது.

இதற்கும் மேலாக இங்கிலாந்து அணி தொடர் வெற்றிகளுடன் தானே உலகில் இரண்டாவது பலமான அணி என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. கடந்த வருடம் தொடர்ச்சியாக ஏழு டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்ற இங் கிலாந்து தென்னாபிரிக்க சுற்றுலாவில் தனது வெற்றிப்பயணத்தை மேலும் தொடர உறுதி கொண்டும் இருந்தது.

ஆனால் தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரமான ஜாக்கலிஸ் நிதானமாகவும், உறுதியுடனும் ஆடி அணியின் கனவை நனவாக்கியதுடன், இங்கிலாந்தின் தொடர் வெற்றிப் பயணத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார் என்றால் மிகையில்லை. இவரைவிட தற்போது அணியில் சிறந்த பந்து வீச்சாளர்களாக இடம்பெற்றுள்ள நிற்றினி, பொலக் ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

இது ஒட்டுமொத்த அணியின் கூட்டு முயற்சியால் பெறப்பட்ட வெற்றியாக அமைய தென்னா பிரிக்க அணி புதுத் தெம்பைப் பெற்றுள்ளதுடன் பலமான அணி என தன்னை மார்தட்டிக் கொண்ட இங்கிலாந்து அணி யின் தொடர்வெற்றிக்கும் ஆப்பு வைத்தது. இது தென்னா பிரிக்க அணி மீண்டும் தனது வெற்றிப் பயணத்தை தொடர்வதுடன் இழந்துவிட்ட தனது இடத்தை தக்கவைக்குமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



## மகத்துவம் நிறைந்த போட்டி

ஒருகாலத்தில் சோம்பேறிகளின் விளையாட்டு எனப் பெரும்பாலானவர்களால் வர்ணிக்கப்பட்ட



கிரிக்கெட் ஆட்டம் தற்போது உலகில் தரம் வாய்ந்த அதிக எண்ணிக்கையானோரால் ரசித்துப்பார்க்கப்படும் விளையாட்டாகி விட்டது.

இந்தவரிசையில் சில நிறுவனங்கள் தனது ஆதரவுடன் தனது வியாபார சின்னங்களின் பெயர்களில் மூன்று, அல்லது இரண்டு நாடுகள் பங்குகொள்ளும் வெற்றிக்கிண்ணம் முதல் ஆசிய உலக கிண்ணப் போட்டிகள் வரை ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இவற்றை எல்லாம் விஞ்சுகின்ற வகையில் தென்னாசிய நாடுகளை உலுக்கிய சுனாமி அலையினால் நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ள மக்களுக்காக அவர்களின் மீள் குடியமர்த்தலுக்குதவும் வகையில் நிதிசேகரிக்க நடத்தப்படும் போட்டிகள் இரண்டும் மேற்குறிப்பிட்ட போட்டிகளை விட சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

உலகின் தலைசிறந்த வீரர்களை ஆசிய, உலக அணிகளாகப் பிரித்து போட்டிகளை நடத்த சர்வதேச கிரிக்கெட்சபை எடுத்த முயற்சி இத்தருணத்தில் விபத்தில் சிக்கிய ஒருவருக்கு அளிக்கும் முதலுதவி போன்றதாகும். இப்போட்டியில் எந்த அணி வெற்றி பெற்றாலும் அல்லது இதன் மூலம் பெறப்படும் நிதி எவ்வளவு தொகையாக இருப்பினும் தற்போது மனதளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இது ஒரு ஆறுதல் அளிக்கும் எனக் கருதலாம்.

காரணம் சுனாமி தாக்கத்தால் உயிரிழந்தவர்கள் போக எஞ்சியுள்ள பாதிக்கப்பட்டோர் உடலளவில் எத்தனை பாதிப்பு காயம் ஏற்பட்டிருப்பினும் மாற்ற முடியாத காயம். அவர் தம் மனதில் ஏற்பட்டுள்ளதை கூறத் தேவையில்லை. கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன் அல்லது இவர்கள் இருவரையும் பிரிந்த பிள்ளைகள், அப்பப்பா சிந்திக்கவே முடியாத மன வேதனையை அவர்கள் பெற்றுள்ளனர். குறிப்பாக மனிதாபிமான ரீதியில் சிந்திப்போமாயின் முழு உலகமே இதனால் ஆடிப்போயிருப்பதே உண்மையாகும்.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வழிவகைகள் பல்வேறு படிகளில் நடைபெற்று வருகின்றன. அகதிமுகாம்களிலும் வீடுகளிலும் சென்று அவர்களை ஆற்றுப்படுத்தும் செயல்களில் உளவளத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் விபரமறிந்தவர்கள் தமது கவலையை ஓரளவு மறக்கவும் அதிர்ச்சியுற்ற சிறுவர்களின் மன நிலையை மாற்றவும் இவ்வழிகள் உதவுகின்றன.

அந்த வரிசையில் மேற்படி உலக,ஆசிய நாடுகள் பங்கு பற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளும் பாதிக்கப்பட்டோருக்கு சிறு மனமாற்றத்தை ஏற்படுத்தலாம். ஏனெனில் உலகின் முக்கிய வீரர்களான லாரா, ஜயசூரியா,சச்சின், ஷேன் வோர்ன், முரளிதரன் ட்ராவிட் கங்குலி, ஹெய்டன், பொண்டிங் எனப் பல விலைமதிக்க முடியாத வீரர்கள். இவர்கள் அனைவரும் கிரிக்கெட் உலகில் முத்துக்களாக மதிக்கப்படுபவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே மாலைக்குள் அடங்குவதால் கவர்ச்சியான மாலையாக அது அமையலாம்.

இவ்வாறான ஒரு போட்டியை நடத்த I.C.C முன்வந்தமையும் 80 ஆயிரம் பேரை அடக்கக்கூடிய அவுஸ்திரேலிய M.C.G மைதானம் தெரிவுசெய்யப் பட்டதும் வீரர்கள் இவ்வாறான தொரு போட்டியில் பங்கேற்க முன்வந்தமையும் இச்சமயத்தில் பாராட்டைப் பெறாமல் இருக்க முடியாது. அத்துடன் இப்போட்டி 122 நாடுகளில் தொலைக்காட்சி மூலம் கண்டு களிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டன.

எனவே மனதில் ஏற்பட்டிருக்கும் காயத்துக்கு ஏற்றமருந்தாக இது அமையும் என்பதில் ஐயமில்லை.

வடிவேல்



## வாகனேரியில் கைக்குண்டு வீச்சு மூவர் பலி; 37 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவமொன்றில் மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பெண்கள் குழந்தைகள் உட்பட 37 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மரண வீடொன்றில் துக்கம் விசாரித்து வந்தவர்கள் மீது இக்கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் சில தினங்களுக்கு முன்பு இடம்பெற்ற பிரச்சினைகள் தொடர்பாகவே இச்சம்பவம் இடம் பெற்றிருக்கலாமென்றும் இது தொடர்பாக இருவர் கைதாகியிருப்பதாகவும் வாழைச்சேனை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ஜே.வி.பி.யின் நிவாரண நடவடிக்கை குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட தெற்கு மாவட்டங்களில் ஜே.வி.பியினரின் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணையை ஆரம்பிக்கவுள்ளது. சனாதிபதிக்கும், பிரதமருக்கும், சர்வதேச சமூகத்துக்கும், மூத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினால் ஜே.வி.பியினரின் நிவாரண நடவடிக்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர்களாலும், பாராளுமன்ற உறுப்பினர்களினாலும், தெற்கு வாழ் பொது மக்களாலும் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என மகிந்த ராஜபக்ச சண்டே லீடருக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜே.வி.பி.யினர் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணப் பொருட்களைப் பறிமுதல் செய்து தமது கட்சியை ஆதரிக்கும் சுனாமியாற் பாதிக்கப்பட்டவர்களிற்கு மீள விநியோகித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்துதான் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஜே வி.பி.யினர் மற்றக் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி போன்றல்லாது கூடுதலான நலன்புரிமுகாம்களில் தனது கட்சியின் சின்னமான சிவப்பு நிற ரி-சேட்களையும், தொப்பிகளையும் அணிந்து வேலை செய்வதுடன் தமது கொடிகளையும் பதாகைகளையும் விநியோகிக்கின்றனர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகள் கூட அவர்களினது சீருடைகளை அணிந்தவர்களை இடம் பெயர்ந்தோர் முகாம்களில் அனுமதிப்பதில்லை. ஆனால் ஜே.வி.பினர் இவ்வாறு தமது சீருடைகளையும் சின்னங்களையும் அணிந்துள்ளனர்.மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விபரிக்கையில் ஜே.வி.பி.யின் நடவடிக்கை புதுமையானதும், சுனாமி அழிவிலும், நிவாரண நடவடிக்கையிலும் அரசியலைப் புகுத்துவதினாலும் ஏனைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சிகளினுள் கலவரத்தை ஏற்படுத்துவதாக உள்ளது எனக் குறிப்பிட்டதுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியின் அரசியற் கட்சிகளுக்கிடையில் எட்டப்பட்ட உடன்படிக்கைக்கு மதிப்பளிக்காது அரச மூலாதாரங்களைப் பிழையாகப்பயன்படுத்தி தனது சொந்த அரசியல் கட்சிக்குப் பெருமை தேடுகின்றது எனவும் ஆத்திரத்துடன் கூறினார். ஜே.வி.பி.யினர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்குத் தனியான ஒரு அங்கீகாரத்தைப் பெற முயற்சிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை, தங்காலை, கிரிந்த, மாத்தறைப் பிரதேசங்களில் ஜே.வி.பி.யினர் அரச காணிகளில் தற்காலிக முகாம்களை அமைத்து தமது ஆதரவாளர்களிற்கு புகலிடம் அழித்து வருகின்றனர் என தெற்கு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தெற்கில் அமைந்துள்ள பல நிவாரண மையங்கள் ஜே.வி.பி.யினரின் நிவாரண மையங்களினுள்ளே மாற்றப்பட்டுள்ளது. அங்கு நாம் சிவப்பு பதாகைகளையும், சிவப்பு கொடிகளும் மட்டுமே சகல இடங்களிலும் பார்க்க முடியும். இது அக்கட்சி தனது சொந்த அரசியற் கட்சிக்குப் பெருமை சேர்க்கின்ற நடவடிக்கையே அரசாங்கத்திற்கல்ல எனச் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த

நிர்மலராஜ் - இளவேந்தி தம்பதிகளின்

செல்வப் புதல்வி

**செல்வி. நி.மிர்ணாலினி**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று 11.01.2005 செவ்வாய்க்கிழமை உருத்திரபுர இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றாள். செல்வி.மிர்ணாவை அன்புடன் அப்பா,அம்மா, அப்பம்மாமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், அத்தைமார், மாமாமார், அம்மம்மாமார் மற்றும் லண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அன்ரி பிரிந்தா, மாமா அமுதன் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் உருத்திரபுரீஸ்வரன் அருளோடு சீரோடும் சிறப்போடும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல்
ஜே.நிர்மலராஜ்
(கஜீவன்)
**No.06 D/10 உருத்திரபுரம்**

(5534)

## எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

01.மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த அனைவரும் 12.01.2005, 13.01.2005 ஆகிய இரு தினங்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 01.00 மணிவரைக்குமான நேரத்திற்குள் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

02.நேர்முகத் தேர்வுக்கு வருகை தருபவர்கள் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிறதகைமைச் சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை என்பவற்றுடன் வருகை தருதல் வேண்டும்.

03.நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு நடுவப்பணியகம். (கிளி.மகாவித்தியாலயம் அருகாமை)

பொது மேலாளர்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
கிளிநொச்சி.

(சி.11066)

# ஈழநாதம் மக்கள் நாளேட்டின்

## ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர்வரும் 19.02.2005 அன்று 16 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்கு

- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்

என்பன ஆக்ககர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன

ஆக்கங்களை 30.01.2005 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

அனுப்புபவர்கள் தமது தெளிவான அஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்.

ஆக்கங்கள் சமூக,அரசியல்,பொருளாதார,விஞ்ஞானத் துறைகள் சார்ந்தவையாகப் பரந்துபட்ட தளத்தில் ஆக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆசிரியர்,
ஈழநாதம்,
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# தெற்காசியாவில் கடலுக்கடியில் விரைவில் பூகம்பம் ஏற்படலாம்

## -இந்திய அறிவியல் சங்கத்தின் ஆய்வு தெரிவிப்பு

(மும்பை)

இந்திய பெருங்கடலில் அடுத்தடுத்து நில நடுக்கம் ஏற்படுவதால் இந்திய அறிவியல் சங்கத்தைச் சேர்ந்த நிபுணர்கள் பூகம்பம் மற்றும் சுனாமி அபாயம் குறித்த ஆய்வைத் தொடங்கியுள்ளனர்.

உலக வானிலை ஆய்வுக் கழகம் மற்றும் இந்திய பூகம்ப எச்சரிக்கை மையங்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து அவர்கள் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். முதற்கட்டமாக அவர்கள் நேற்று முன்தினம் ஆய்வு முடிவின் ஒரு பகுதியை வெளியிட்டனர்.

இந்திய அறிவியல் சங்கத்தின் ஆய்வுப்படி தெற்கு ஆசிய மண்டலத்தில் கடலுக்கு அடியில் விரைவில் பெரிய பூகம்பங்களும், சுமார் 7 ரிக்டர் ஸ்கேல் அளவுடன் நில நடுக்கங்களும் உண்டாகும் என்று தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக அரபிக் கடலிலும், இந்திய பெருங்கடலிலும் சுனாமி அலைகள் உருவாகும் என்று கண்டுபிடித்துள்ளனர். இந்த சுனாமி அலைகளின் வேகம் குறைவாக இருக்கும். என்றாலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அரபிக் கடலுக்கு அடியில் ஏற்படும் பூகம்பம் காரணமாக உண்டாகும் சுனாமி அலைகள் மும்பையைத் தாக்கும் என்று இந்திய அறிவியல் சங்கம் வரைபடம் தயாரித்துள்ளது. அது போல இந்திய பெருங்கடலில் ஏற்படும் நில நடுக்கம் காரணமாக ஒரிசா மாநிலத்தை சுனாமி தாக்கும் என்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சுனாமி அபாயம் அடுதத சில மாதங்களில் விரைவில் ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். தேவையான முன் எச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்யும்படி அவர்கள் இந்திய வானிலை இலாகாவையும்,அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையையும் வலியுறுத்தியுள்ளனர்.

# ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறிய பேருந்து கால்வாய்க்குள் பாய்ந்ததில் 50 பேர் பலி

(பெங்களூர்)

கர்நாடக மாநில அரசு போக்குவரத்துக் கழகத்திக்குச் சொந்தமான பேருந்தொன்று நேற்று அதிகாலை ஹுப்ளியில் இருந்து குல்பர்கா மாவட்டம் சித்தாபூருக்கு சென்று கொண்டிருந்தது. பிஜப்பூர் அருகே அலாமதி கால்வாயில் சென்றபோது எதிர்பாராத விதமாக பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து ஓடி கால்வாய்க்குள் பாய்ந்தது. கால்வாயில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. பயணிகள் அனைவரும் தண்ணீரில் மூழ்கினார்கள்.

இதில் 50 பேர் பலியானார்கள் தகவல் கிடைத்ததும் எஸ்.கே.சிங் தலைமையில் பொலிஸ் படையும் மீட்புப் படையினரும் விரைந்தனர். அதிகாலை நேரம் என்பதால் கடும் பனி மூட்டம் நிலவியதாலும் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டது.பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

பேருந்துக்கு அடியில் கால்வாய்க்குள் மேலும் சடலங்கள் இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. பேருந்தை வெளியே எடுக்க கிரேன கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடக்கின்றன.

# இந்திய அரச பேருந்துக்கு நக்சலைட்டுக்கள் தீ வைப்பு

(புதுடில்லி)

ஆந்திராவில் அரசுப்போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்றை நக்சலைட்டுக்கள் தீவைத்துக் கொளுத்தினர். மேலும் ஒரு பேருந்தை சேதப்படுத்தினர்.

இது குறித்துப் பொலிசார் கூறியதாவது;

ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் உள்ளது ஜூலகல்லு கிராமம் நேற்று முன்தினம் அதிகாலை இக்கிராமத்திற்குள் நுழைநத நக்சலைட்டுக்கள் ஹைதராபாத் செல்லும் பேருந்து ஒன்றை நிறுத்தினர். அதிலிருந்த பயணிகளை இறங்குமாறு கேட்டுக்கொண்ட நக்சலைட்டுக்கள் பின்னர் பேருந்தை தீ வைத்துக்கொளுத்தினர். கோபம் தணியாத நக்சலைட்டுக்கள் சிறிது நேரத்திற்குப் பின் மேலும்ஒரு பேருந்தை அடித்து நொருக்கினர்.

அப்போது பொய்யான காரணங்களைக் கூறி பொலிசார் எங்கள் மீது நடத்திய தாக்குதலில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இந்தச் செயலை செய்தோம் எனக் கூறி கோஷங்களை எழுப்பியவாறே அந்த இடத்தை விட்டுச் சென்றனர். சேதமடைந்த பேருந்தின் மதிப்பு ரூ.15 இலட்சம் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது இவ்வாறு பொலிசார் கூறினர்.

# அந்தமான் நிக்கோபார்தீவுகளின் பொருளாதாரம் பெரும்பாதிப்பு

அந்தமான் நிக்கோபார் தீவுகளிற்கு ஆண்டு தோறும் பல நூறு கோடி ரூபா வருவாயைப் பெற்றுக் கொடுத்த சுற்றுலாத் துறை தொழில் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடற் பேரழிவிற்கு பின் தலைகீழாகி விட்டது.

சுனாமியினால்தற்போது முடங்கிப் போயுள்ள சுற்றுலாத் தொழில் மீண்டும் வளம் பெற நெடுங் காலம் செல்லும் என்றும் சுற்றுலாத்துறை நிபுணர்கள் கூறியுள்ளனர். அவர்கள்மேலும் கூறுகையில், பொதுவாக நவம்பர் முதல் பெப்ரவரி வரை அந்தமான் நிக்கோபார் தீவுகளில் சுற்றுலா செல்லும் காலம். டிசம்பர் மாதத்திற்கு 6 மாதங்களிற்கு முன்னதாகவே முன்பதிவுகள் ஆகிவிடும் எனவும், கடந்த டிசம்பர் 26 ஆம் திகதிக்கு பின்னர், முற்றிலும் தலைகீழாக மாறி விட்டதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

# பாராட்டு

இந்தியாவில்சுனாமி முன்னெச்சரிக்கை அமைப்பை உருவாக்குவதற்கு டில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு பாரதிஜ ஜனதாகட்சி வரவேற்புத் தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இக் கூட்டத்தில் இதில் மத்தியிலும் மாநிலங்களிலும் விரைவில் பேரழிவு மேலான்மையங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பது என்று முடிவெடுக்கப் பட்டது.


# பதவி வெற்றிடம்

பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரிக்கப்பட்டதாகவும், சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் அமைய வேண்டும். விண்ணப்பங்கள் தலைவர், கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், வாடியடி, பூநகரி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 26.01.2005 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

* பதவி:-கணக்குப் பதிவாளர்(301-12)
சம்பள அளவுத்திட்டம்:- 4250-5950
80X10-90X10

தகைமைகள்:-அ.கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப்பதிவாளர் அல்லது கணக்குப் பகுதியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் அதேபதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ.ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தி

அல்லது

கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) சான்றிதழ்/ கல்விப் பொதுத்தராதர (உயர்தரத்தில்) கணக்கியல் ஒரு பாடமாக கொண்ட மூன்று பாடங்களில் சித்தி.
கணினி அறிவு விரும்பத்தக்கது.

2.பதவி:-எழுதுனர் 302/15
சம்பள அளவுத்திட்டம்:- 3500-4850
65X10-70X10

தகைமைகள்: அ)கூட்டுறவு வேலையாளர்களினது பதினாறாவது சம்பளத் திட்டத்தில் லிகிதர் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
ஆ)க.பொ.த.(சாதாரண தரம்) கணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம்/ சிங்களம்/தமிழ் பாஷை உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும், கூட்டுறவு சங்க லிகிதர் பதவி ஒன்றில் ஒரு வருடத்திற்குக் குறை யாத அனுபவம்.
இரு பதவிகளுக்கும் கணினி அறிவு விரும்பத்தக்கது.

03.பதவி:-சாரதி-312/14
சம்பளத்திட்டம்:- 3750-5200
70X10-75X10

கல்வித் தகைமை:-ஐந்தாம் வகுப்பு கல்வித்தகைமைகளுடன் பஸ், லொறி, உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

04.பதவி:- நடத்துனர்:- 314/16
சம்பளத்திட்டம்:- 3250-4500
60X10-65X10


கல்வித்தகைமை: அ)கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒருவருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ.ஐந்தாம் வகுப்புக் கல்விச்சான்றிதழும், சிறந்த தேகஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
* சுற்றுநிருபங்களின் படி விதிக்கும் ஏனைய படிகள் யாவும் வழங்கப்படும்.
வயதெல்லை:-18-45
(கூட்டுறவுச் சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)

தகவல்:
ஜோ.பிரான்சிஸ்,
தலைவர்,
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசம்,
பூநகரி.

(5545)



## தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் பிளின்டொப்,புச்சரை கிரிக்கெட்சபை கண்காணிக்கும்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நாலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் உடற்தகுதியை இங்கிலாந்தின் அன்ரு பிளின்டொப்,மார்க்புச்சர் ஆகியோர் பெற்றிருக்கின்றனரா என்று இங்கிலாந்து கிரிக்கெட்சபை கண்காணிக்கும் என அறிவித்துள்ளது.

புச்சர்,மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக மூன்றாவது போட்டியில் பங்கேற்கவில்லை .எனினும் அவர் நேற்று பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார் இதேபோன்று பிளின்டொப் வயிற்றில் காயம் காரணமாக ஓய்வு பெற்றார்.

இதற்கிடையில் 3ஆவது போட்டியை இங்கிலாந்து தென்னாபிரிக்காவிடம் இழந்தது. அது அன்ருஸ்ரோஸ்,விக்கட்காப்பாளர் ஜெராய்ன்ட் ஜோன்ஸ் ஆகியோருக்குக் கிடைத்த முதல் தோல்வியாகும்.இதைப்பற்றி கருத்துக் கூறிய ஜோன்ஸ் தோல்வியைச் சந்திப்பதை தான் விரும்பவில்லை என்றார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் பங்களாதேசுக்கு முதல் வெற்றி
## சிம்பாப்வேயை 226 ஓட்டங்களால் தோற்கடித்தது



டெஸ்ட் கிரிக்கெட்போட்டியில் பங்களா தேஷ் அணி தனது முதலாவது வெற்றியை நேற்றுப் பெற்றுக்கொண் டது.

பங்களாதேஷின் சிட்டகொங்கில் சிம்பாப்வேக்கு எதிராக நேற்று நிறைவு பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 226 ஓட்டங்களால் சிம்பாப்'வேயை தோற்கடித்ததன் மூலம் இந்த வரலாற்று வெற்றியை பங்களாதேஷ் அணி பெற்றது.

381 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் 3 விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட் டங்களுடன் போட்டியின் ஐந்தாவதும், இறுதி நாளான நேற்று துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே




154 ஓட்டங்களுக்கு மிகுதி அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது.

பந்துவீச்சில் இனாமுல்ஹக் 22.2 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார். துடுப்பாட்டத்தில் மசகட்சா 56 ஓட்டங் களையும், ரெயிலர்44 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப்பெற்றனர். 2000 ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்துப்பெற்ற பங்களா தேஷ் இது வரை 35 டெஸ்ட் போட்டிக ளில் விளையாடியுள்ளது. இப்போதே முதலா வது வெற்றியைபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.பங்களாதேஷ் முதலாவது இனிங்சில் 488 ஓட்டங்கள். சிம்பாப்வே முதலா வது இனிங்சில் 312 ஓட்டங்கள்.

பங்களாதேஷ் இரண்டாவது இனிங்சில் 204 ஓட்டங்களைப் பெற்றது.

## சுனாமி நிவாரண நிதி கிரிக்கெட்போட்டி
# பொண்டிங்,கெய்ன்ஸ் அதிரடி சூடுப்பாட்டம் உலக 11 பேர் அணிக்கு அபாரவெற்றி



சுனாமி நிவாரண நிதிக்காக உலக 11 பேர் அணிக்கும் ஆசிய 11 பேர் அணிக்கும் இடையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் போட்டியில் உலக 11 பேர் அணி 112 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.



மெல்பேர்னில் பகல்-இரவு போட்டியாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உலக 11 பேர் அணித்தலைவர் பொண்டிங் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித் த்தார்.

அவுஸ்திரேலிய வீரர் கில்கிறிஸ்டும் மேற்கிந்திய வீரர் கிறிஸ் கெய்லும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங் கினர்.

கெய்ல்ஸ் ஒரு ஓட்டத்துடனும், கில்கிறிஸ்ட் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 20 பந்தில் 24 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தனர்.

பின்னர் மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த லாறாவும், பொண்டிங்கும் அனல் பறக்கும் ஆட்டத்தில் ஈடுபட்டு ஓட்டத்தை அதிகரித்தனர்.

லாறா 52 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆனாலும் பொண்டிங் அதிரடி ஆட்டத்தைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி 98 பந்துகளில் (8 நான்கு ஓட்டம், ஒரு ஆறு ஓட்டம்) சதமடித்தார். பின்னர் அபாரமாக ஆடிய பொண்டிங் 102 பந்துகளில் 115 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இவரை விட நியூசிலாந்தின் சகலதுறை வீரர் கிறிஸ் கெயின்ஸ் 47 பந்துகளில் 69 ஓட்டங்களையும், பிளெமிங் 28 பந்துகளில் 30 ஓட்டங்களையும், விக்டோரி 17 பந்துகளில் 27 ஓட்டங் களையும் அதிரடியாகப் பெற்றனர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் உலக 11 பேர் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும், சஹீர்ஹான் கும்ளே தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இமாலய வெற்றி இலக்கு நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த ஆசிய 11 பேர் அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கள் சோபிக்காததால் 39.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.ராகுல் ராவிட் மாத்திரம் ஆட்ட மிழக்காது 71 பந்துகளை சந்தித்து 75



ஓட்டங்களைப் பெற்றார்.

இவரைவிட சேவாக் 45,ஜெயசூரிய 28,கங்குலி 22,சங்கக்கார24 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் டானியல் விட்டோரி 3 விக்கெட்டுக் களையும்,வோர்ன் 2 விக்கெட்டுக்களையும், மெக்ராத், கெய்ன்ஸ்,கொக் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக 115 ஓட்டங்களை பெற்ற ரிக்கிபொண்டிங் தெரிவானார்.



## மீண்டும் அணிக்கு திரும்புகிறார் ஷேன் பொன்ட்




தொடர்ந்து முதுகுவலியால் அவதிப் பட்ட நியூசிலாந்து அணியின் பிரபல வேகப் பந்து விச்சாளரான ஷேன் பொன்ட் கழகப் போட்டிகளில் பங்கெடுத்து தேசிய அணிக்கு திரும்பவுள்ளார்.

அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கும் அணியில் இவர் இணைத்துக் கொள்ளப்படுவார். இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் அணியில் இடம் பெறவில்லை. தற் போது கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் இவர் பங்கெடுத்து வரு கிறார் அண்மையில் இவர் பங்கெடுத்த போட்டி யில் 10 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை மட்டும் கொடுத்து ஒரு விக் கெட்டை கைப்பற்றிருந்தார்.

## தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் எனது கிரிக்கெட் வாழ்வில் விவியனே

### கபில்தேவ்




எனது கிரிக்கெட் வாழ்க்கை யில் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக விவியன் ரிச்சட்சைக் கருது வதாக முன்னாள் இந்திய அணித் தலைவரும் சகலதுறை வீரரு மான கபில்தேவ் தெரிவித் துள் ளார்.

மாணவர்களின் கேள்வி ஒன் றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

விவியன் ரிச்சர்ட்,நான் பந்து வீசினாலும் சரி இம்ரான்கான் பந்து வீசினாலும்சரி மனிதர் அசரமாட்டார். எந்த ஒரு பந்து வீச்சா ளரையும் சவாலுடன் எதிர்கொள் வார் எனத் தெரிவித்த கபில் இவருக்கு பந்துவீச நான் அப் போது ஆவலாய் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




## சென்னை ஓபன் டெனிஸ் மோயா மீண்டும் சம்பியன்




சென்னை ஓபன் டெனிஸ் போட்டி யின் ஒற்றையர் பிரி வில் மோயா மீண் டும் 'சம்பியன்' பட் டம் வென்றார்.

சென்னை ஓபன் ஏ.டி.பி. டெனிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. டெனிஸ் மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி தொடங்கி நடை பெற்று வந்தது. இதன் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் கடந்த முறை சம்பியன் கார்லஸ் மோயா (ஸ்பெயின்) தாய்லாந்து வீரர் பரோடன் ஸ்ரீசேப்பனிடம் மோதினார்.

கடந்த முறை மோயாவிடம் தோற்றதற்கு இந்தமுறை ஸ்ரீசேப்பன் பழி தீர்ப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.


எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல் ஸ்ரீசேப்பனின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அவருக்கு ரசிகர்கள் கைதட்டி அமோக ஆதரவு அளித்தனர்.

முதல் செட்டை ஸ்ரீசேப்பன் 6-3 என்ற கணக்கில் தனதாக்கினார்.அடுத்த செட்டை மோயா 6-4 என்ற கணக்கில் தனக்குச் சொந்தமாக்கினார்.

இதனால் ஆட்டம் பரபரப்புடன் 3 ஆவது செட் டுக்கு நகர்ந்தது. இதில் ஸ்ரீசேப்பன் 5-2 என்ற கணக் கில் முன்னணி பெற்றார். இதனால் ஸ்ரீ சேப்பனின வெற்றி உறுதி என்று எண்ணி ரசிகர்கள் அதிக ஆரவாரம் செய்தனர்.

ஆனால் இந்தநிலை நீண்ட நேரம் நீடிக்க வில்லை.'பீனிக்ஸ்' பறவை போல மோயா சரிவில் இருநது மீண்டு கடைசி செட்டைக் கைப்பற்றினார். இதன் மூலம் மோயா 3-6,6-4,7-6,(7-5) என்ற செட் கணக்கில் ஸ்ரீசேப்பனை வீழ்த்தி மீண்டும் 'சம்பி யன்' பட்டத்தைக் கைப்பற்றினார்.'சம்பியன்' பட்டம் வென்ற மோயாவுக்கு ரூ.24 இலட்சம் பரிசாக வழங்கப்பட்டது."சரிவில் இருந்து மீண்டும் இந்தப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றது சிறப்பானது" என்று கூறிய மோயா, போட்டியில் கிடைக்கும் பணம் முழுவதையும் 'சுனாமி நிவாரண நிதிக்கு அளித்தார்.

## சிந்தனைக்கு



மிகவும் கொடுங்கோன்மையான இராணுவ சர்வாதிகார ஆட்சி எம் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது; தமிழ் இனத்தின் தேசிய ஆன்மாவை ஆயுத பலாத்காரத்தின் மூலம் அடிமை கொள்வதே எதிரியின் திட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## மனிதாபிமான செயலுக்கு அப்பால்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கொபி அனானின் வன்னிக்கான விஜயம்-குறிப்பாக சுனாமி பேரலைகளினால் பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவிற்கான விஜயம்- சிறிலங்கா அரசினால் தடைப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்கான முழுப் பொறுப்பும் சந்திரிகா அரசிற்கானது என்பதில் சந்தேகம் கொள்ளவோ கேள்வி கேட்கவோ இடமில்லை.

ஐ.நா.செயலர் கொபி அனான் உட்பட ஐ.நா.தரபபினர் கூட இதனை ஓரளவேனும் வெளிப்படுத்தியுள்ளனர் என்றே கூறலாம், இதன் வெளிப்பாடே வன்னிக்கு விஜயம் செய்யாததையிட்டு கொபி அனான் அவர்கள் தெரிவித்த வருத்தமும் மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு வரும் போது வன்னிக்கு நிச்சயமாக விஜயம் செய்வேன் என வெளியிட்ட அபிப்பிராயமும் ஆகும்.

கொபிஅனான் அவர்களின் பயண நிகழ்ச்சி நிரலில் அவரின் வன்னிக்கான பயணம் இடம் பெறாமைக்குப் பாதுகாப்பு இன்மையும் நேரம் ஒதுக்கீடு செய்ய முடியாமல் போனமையும் காரணம் எனச் சிறிலங்கா அரசதரப்பில் கூறப்பட்டுள்ள காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இதனை தமிழர் தரப்பு மட்டுமல்ல ஐ.நா. தரப்புக் கூட ஏற்றுக் கொள்ளும் என்பதற்கில்லை.

அவ்வாறு இருந்திருப்பின் ஐ.நா தரப்பு கொபி அனானின் வன்னி விஜயத்தில் அக்கறைகாட்டியிருக்கமாட்டாது என்பது மட்டுமல்ல பின்னர் வன்னி செல்லாமைக்கு வருத்தம் தெரிவித்திருக் கவும் வாய்ப்பில்லை. அத்தோடு பாதுகாப்பு இன்மை அன்றி நேரம் இன்மையே வன்னி செல்ல முடியாமல் போனமைக்குக் காரணம் என அவர்களே வெளிப்படையாக அறிவித்தும் இருப்பார்கள்.

ஆகையினால் எந்தவித சந்தேகமுமற்று சிறிலங்கா அரசே கொபி அனானின் வன்னி விஜயத்திற்கு முட்டுக்கட்டை போட்டது என்பது வெளிப்படையானது. இவ்வாறு அரசு முட்டுக்கட்டை போடு வதென்பது சிங்கள ஆட்சியாளர்கள் வழமையாகக்கடைப்பிடிக்கும ஒரு தந்திரோபாயமே.

பொதுவில் வெளிநாட்டுத் தலைவர்கள், இராஜதந்திரிகள், சர்வ தேச நிறுவனங்களின் தலைவர்கள் வன்னிக்கு விஜயம் செய்ய முற்படும் போதெல்லாம் இவ்வாறு நடப்பதுண்டு. நொண்டிச்சாட்டுக கள் சொல்லித்தடுக்கப்படுவதுண்டு.

இவ்வாறு சிறிலங்கா அரசு நடந்து கொள்கின்றமைக்கு ஒரே காரணம் விடுதலைப்புலிகளும் - தமிழீழ விடுதலைப் போராட்டமும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவிடுவர்/பெற்றுவிடும் என்ற காரணமே ஆகும். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தகைய சிந்தனைப் போக்கு சரியானதொன்றல்ல. மாறாக இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையின் கூர்மையை வெளிப்படுத்தவே உதவத்தக்கதாகும்.

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டமும் அது பெறக்கூடிய அங்கீகாரமும் அப் போராட்டத்தின் நியாயப்பாட்டின் அடிப்படையிலேயே உள்ளது. அதாவது ஒருபுறத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோருவதற்கான அந்தஸ்து நிலையும், மறுபுறத்தில் சிறிலங்கா அரசு இச்சிறுபான்மை இனத்தின் மீது மேற்கொள்ளும் ஒடுக்குமுறையை எதிர்த்து அவர்கள் நடத்தும் போராட்டத்தின் வலிமையினையும் பொறுத்ததுமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினையானது விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திய பின்னர் தான் உருவானதல்ல. இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே கூர்ப்புப் பெற்றதாகவே இருந்தது. ஆனால் அவ்வேளையிலும் சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராகச் சாத்வீகப் போராட்டங்கள் நடத்தப்பட்டபோதிலும் அது எவராலும் கவனத்தில் கொள்ளப் படவில்லை. மாறாக ஆயுதப் போராட்டம் கூர்மை பெற்று சிறிலங்கா அரசின் ஒடுக்கு முறையையும் மீறி வளர்ச்சி கண்டுள்ள நிலையில் தான் இன்று உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

ஆகையினால் விடுதலைப் போராட்டம் பெறும் அங்கீகாரமானது அதன் தார்மீக பலத்திலும் போராடும் வலுவிலுமே உள்ளது. ஐ.நா பொதுச் செயலர் கொபி அனான் வருவதினாலோ தமிழ்மக்களின் துன்பதுயரங்களைப் பார்வையிடுவதினாலோ அல்ல. மாறாக கொபி அனானை வன்னிக்கு வர முடியாமல் தடுத்தன் மூலம் இலங் கையில் நிலவும் இனப்பிரச்சினையின் தீவிரமுரண் பாட்டை வெளிப்படுத்தியுள்ளதுடன், சமாதான முயற்சிகளில் அவர் ஆற்றக் கூடிய பங்களிப்பினையும் சந்திரிகா அரசாங்கம் இல்லாது ஒழித் துள்ளது என்பதே உண்மையாகும்.

ஏனெனில் கொபி அனான் வன்னிக்குவரும் பட்சத்தில் அவர் விடுதலைப்புலிகளின் உயர்மட்டத்துடன் சந்திப்பொன்றை நிகழ்த் தவாய்ப்புண்டு. இதில் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவு கள்/துயரங்கள் தொடர்பாக மட்டுமல்ல சமாதானப் பேச்சு வார்த்தை குறித்தும் தவறாது கருத்துப்பரிமாற்றம் ஒன்றை மேற் கொள்வது தவிர்க்க முடியாததாகியிருக்கும். இது சமாதான முயற்சிகளுக்கு நிச்சயம் வலுவூட்டுவதாகவே அமைந்திருக்க முடியும்.

ஆனால் கொபி அனானுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் கை குலுக்குவதினால், விடுதலைப்புலிகளுக்கான அங்கீகாரமும் அந் தஸ்தும் உயர்ந்துவிடும் எனக் கருதி சந்திரிகா அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கையானது சந்திரிகா அரசின் மனிதாபிமான பணி களுக்கும் மேம்பட்டதான இனவாதப்போக்கையும், இலங்கையில் இனங்களுக்கு இடையில் உள்ள முரண்பாட்டின் தீவிரத்தையும் உலகிற்கு வெளிக்காட்டியுள்ளது. அதாவது சமாதானப் பேச்சு வார்த்தை எதிர் நோக்கியுள்ள சவால்களை உலகிற்கு வெளிக் காட்டியுள்ளது எனலாம்.

# சோமவன்ச அமரசிங்கவின் கடிதத்திற்கு தமிழ்க்கூட்டமைப்பு கடும் விமர்சனம்

ஐக்கியநாடுகளின் செயலாளர் நாயகம் கொபிஅனானுக்கு ஜே.வி.பி தலைவர் சேமவன்ச அமரசிங்க எழுதிய கடிதம் தொடர்பில் தமிழ்க்கூட்டமைப்பு கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்தக் கடிதம் தொடர்பில் கருத்து வெளியிடும் போது சோமவன்ச அமரசிங்கவின் கூற்றானது தான் ஒரு முழுமையான இனவாதி என்பதை மிகவும் சுத்தமாக நிரூபித்திருப்பதைத்தான் காட்டுகின்றது.

ஏனென்றால் அனர்த்தத்தினால் ஒட்டுமொத்தமாக வடகிழக்கு மாத்திரமல்லாது தென்பகுதியும் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் வடக்குக் கிழக்கில் புள்ளி விபரங்கள் வேண்டும். வடக்குக் கிழக்கில் உண்மையான விபரங்கள் இல்லை. ஐக்கிய நாடுகள் சபையினுடாக புள்ளி விபரங்கள் எடுக்கப்பட வேண்டும். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பது பிள்ளை பிடிக்கும் அமைப்பு, இப்படியான முறையில் சோமவன்ச அமரசிங்க கருத்துக் கூறியிருப்பதானது மிகவும் வேதனைக்குரியது மாத்திரமல்ல, சோமவன்ச அமரசிங்கவிற்கு இலங்கையில் வடகிழக்கு மாகாணம் என்ற ஒன்று இருக்கின்றது. அங்கு முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்கள இருக்கின்றன. அவை பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற விடயங்கள் எல்லாம் இவருக்கு எவ்வளவு தூரம் புரிகின்றது என்று எனக்குத் தெரியவில்லை.

அவர் கூறியதைப் பார்க்கும் போது தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்ற தோரணையில் தமிழ்மக்களுடைய கோரிக்கைகள் அற்றுப் போக வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் அவரது முழுமையான பேச்சும் அமைந்திருக்கின்றது. உண்மையாகவே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்நாயகம் யாழ்ப்பாணத்திற்குச் செல்லாமல் விட்டமைக்கான அழுத்தங்களை கொடுத்ததிற்கும் இவர்களுக்கும் பாரியதொரு பங்கு இருக்கின்றது.

முல்லைத்தீவிற்கோ, யாழ்ப்பாணத்திற்கோ சென்று விட்டால் அங்கிருக்கக் கூடிய உண்மையான நிலையைக் கொபி அனான் அவர்கள் தெரிந்து கொள்வார்கள். தெரிந்து கொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு மேலதிகமான உதவிகள் கிடைக்கும். அந்த உதவிகள் கிடைக்க விடாமல் செய்வதில் இவர்கள் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள்.

இன்று இந்த அனர்த்தத் தினூடாக ஜே.வி.பியை எவ்வளவு தூரம் உயர்த்த முடியுமோ அதனை உயர்த்துவதற்கான ஒரு வேலையை தென்பகுதியில் செய்து கொண்டு தமிழ மக்களுக்கு எதுவுமே போகக் கூடாது என்ற நிலைப்பாட்டில் சோமவன்ச அமரசிங்க கூறியது முழுக்க முழுக்க கண்டிக்கப்பட வேண்டியதொரு விடயம்.

இவர்கள் தங்களை இடது சாரிகளாகவும், சமதர்மம் பேசுபவர்களாகவும், சிவப்புச் சட்டைக்காரர்களாகவும் கூறிக் கொள்வது எல்லாம் அர்த்தமற்றதும் கேலிக்குரியதுமான விடயங்கள். சாதாரணமாக மனிதாபிமானமற்ற இவர்கள் நிச்சயமாக மக்களுக்கு உதவக் கூடிய மனோபாவத்தில் இருக்கிறார்களா?

என்பதே பெரிய கேள்வியாகும் ஆகவே எங்களைப் பொறுத்த வரையில் இவர்களுக்கு சொல்லக் கூடியதெல்லாம் இவர்கள் உண்மையாகவே மக்களை மதித்து அல்லது மக்களுடைய பிரச்சினைகளை உணர்ந்து செயற்படுபவர்களாக இருந்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் சமத்துவமாக இந்த உதவிகள் கிடைக்கப் பெற்றிருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடக்குக் கிழக்கில் ரி.ஆர்.ஓ என்பது மிக நீண்டகாலமாக சேவை செய்து வரக்கூடிய ஒரு அமைப்பு. கொபிஅனான் தொடக்கம் சர்வதேச அமைப்புக்கள் வரை எல்லோருமே அவர்களை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள் அவர்களது வேலைத்திறனை முழுமையாகப் புகழ்ந்திருக்கின்றார்கள். சோமவன்சவிற்கு இதைப்பற்றி என்ன தெரியும்? எதுவுமே தெரியாது. தென்பகுதியில் இருக்கக்கூடிய இந்த முட்டாள்த் தனமான கருத்துககளைக் கொண்ட இவர் அங்கிருக்கும் அமைப்பைப் பற்றி புரியாமல் பேசுவது உண்மை யாகவே மிகமிகக் கண்டிக்கக்கூடிய ஒரு விடயம். ஆகவே இவரின் கூற்றைத் தமிழ் மக்கள் யாரும் ஒருவீதமாவது கருத்திலெடுக்க முடியாது என்பது மாத்திரமல்ல இவரது கருத்தைக் கொபிஅனான் கூட செவிமடுத்திருக்க மாட்டார். ஒரு கோமாளித் தனமான கேலிக் கூத்தான இவரது கருத்து யாராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்க முடியாததென்றுதான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

# நிவாரண உதவிகளில் பாரபட்சம் கூடாது அமெரிக்க அரசு உணர்கின்றது

### - அமெ. பத்திரிகைக்கு அமெ. தூதுரக அதிகாரி தெரிவிப்பு

நிவாரண உதவிகளில் எந்தவித பாரபட்சமும் காட்டப்படாது அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதை அமெரிக்க அரசு உணர்ந்ததாக அமெரிக்க தூதுவராலயப் பேச்சாளர் கிறிஸ்லோங் அமெரிக்காவிலிருந்து வெளியாகும் லொஸ் ஏஞ்சல் ரைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அப்பத்திரிகையின் அலுவலக எழுத்தாளரான மொனரேமொரின் இது குறித்து எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கையில் தென்னிலங்கையில் கடற்படையினர் இடிந்த கட்டடங்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்க, விமானப் படையினர் கூடாரங்களையும், மருந்துப் பொருட்களையும் தங்களின் விமானங்களில் இருந்து விநியோகித்த அதேவேளை அமெரிக்கப் படைகள் தமிழர் பிரதேசங்களான வடக்குக் கிழக்கு பகுதிகளில் சேவையாற்றுவதனைத் தவிர்க்க வேண்டிய நிலை இருந்ததனை அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரு நிலையற்ற யுத்த நிறுத்தம் கடைபிடிக்கப்பட்டாலும், ஒரு தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பினருக்கு அமெரிக்க இராணுவத்தினரோ அல்லது அந்நாட்டு அரச நிறுவனங்களோ உதவிகள் வழங்குவதனையோ அமெரிக்க சட்டம் தடுக்கின்றது.

இச் சட்டமும், கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமும் அமெரிக்க அதிகாரிகளை ஒரு தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளியுள்ளது. சில கணிப்பீடுகளின் படி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், அதனை அண்மித்த பிரதேசங்களிலும் 16,000இற்கும் மேலானவர்கள் உயிரிழந்துள்ளனா.

அமெரிக்க தூதுவராலயப் பேச்சாளர் கிறிஸ் லோங் அவர்கள் இந் நிலை பற்றித் தெரிவிக்கையில், இப் பேரழிவு எந்தவொரு பாரபட்சமும் காட்டாது அனைவரையும் அழித்தது போல் நிவாரண உதவிகளிலும் எந்தவித பாரபட்சமும் காட்டாது அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதனை அமெரிக்க அரசு உணர்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்டவர்களின் பட்டியலில் ஒரு அமைப்பு இருப்பதனால், அப்பிரதேச மக்களுக்கு நிவாரணப் பொருட்களை நேரடியாக வழங்குவதையோ அல்லது அனுப்பி வைப்பதனையோ அச் சட்டம் அமெரிக்க அரசினைத் தடுப்பதே இவ் இக்கட்டான சூழ்நிலைக்குக் காரணம் என்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு சூழலில், இலங்கை அரசின் ஊடாகவோ அல்லது வேறு வெளி நாட்டு நிறுவனங்கள் மூலமாகவோ அமெரிக்க அரசு இந் நிவாரண உதவிகளை வழங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இப்படியான ஒரு திட்டத்தின் கீழ், அமெரிக்கப் படையினர் தமிழர் பிரதேசங்களில் நேரடியாக எந்தவொரு உட்கட்டுமான திருத்த வேலைகளிலும் ஈடுபடுவதனை தவிர்க்கலாம்.

பாதிக்கப்பட்ட இடங்கள் அனைத்திற்கும் தாங்கள் இயன்றளவு நிவாரணப் பொருட்களை விநியோகிக்க முயற்சி செய்ய உள்ளதாகக் கூறிய அமெரிக்க அரசின் வெளிநாட்டு பேரழிவு உதவி இயக்குனரான கென் இசாக்ஸ் அவர்கள், தாங்கள் மிகவும் நிதானமாகவே எந்த ஒரு முடிவினையும் எடுக்க வேண்டியுள்ளதனையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# கல்முனை தனியார் மருந்துக்கடையில் நிவாரணத்துக்கு அனுப்பிய மருந்துகள்

நிவாரணப் பணிகளுக்கென வைத்தியசாலை ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் தனியார் மருந்துக்கடையொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவமொன்று கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

அந்த ஊர் மருந்துக்கடை ஊழியர்கள் கொடுத்த தகவல்களே இதனைக் கண்டு பிடிக்க உதவியது எனவும், இது தொடர்பாக கல்முனை காவல்துறையினர் விசேட அதிரடிப்படையினரதும் சுகாதார திணைக்கள அதிகாரிகளின் துணையுடனும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். வைத்திய சாலை அதிகாரிகளும் இந்த விசாரணைக்குட் படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வளிப்பதில் தமிழர்கள் புறக்கணிப்பு

## ம.தி.மு.கழக பொதுச்செயலாளர் வை.கோ. குற்றச்சாட்டு

இலங்கையில் கிழக்கு-வடக்கு பகுதிகளில் 18 ஆயிரம்தமிழர்கள் உட்பட 30 ஆயிரம் மக்கள் சுனாமி பேரலையால் மாண்டுபோயிருக்கிறார்கள். அவர்களது மறுவாழ்வுக்கு இந்தியா 100 கோடி ரூபாய் உதவியுள்ளது. ஆனால் இலங்கையில் மறுவாழ்வு உதவிகள் அளிப்பதில் தமிழர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள் என ம.தி.மு.கழக பொதுச்செயலர் வை.கோ குற்றம் சாட்டியுள்ளார்.

புதுடில்லியில்நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்திலே உரையாற்றும்போதே வை.கோ இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பல நாடுகளிலிருந்து இலங்கைக்குக்கிடைக்கிற உதவிகள் தமிழர்களுக்குச் சரியாகப் போய்ச் சேரவில்லை என்று இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் தெரிவித்துள்ளனர். எனவே, நாம் வழங்கியுள்ள மறுவாழ்வு உதவிகளை எந்தவித பாகுபாடும் இன்றி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போய்ச்சேரும்படி இலங்கைசனாதிபதியிடம் பிரதமர் மன்மோகன்சிங் கேட்டுக் கொள்ளவேண்டும்.என வை.கோ தனதுஉரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# தற்காலிக கொட்டகைகளை அமைத்தலை துரிதப்படுத்த செயற்பாட்டுக்குழு

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை தற்காலிகமாக கொட்டகை அமைத்து குடியமர்த்துவதற்காக நான்குபேர்கொண்ட செயற்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை செலயணிக் குழுவினரால் அமைக்கப்பட்டுள்ள இச் செயற்பாட்டுக் குழுவினர் தற்காலிககொட்டகைகளை அமைப்பதற்கான இடங்களைச் சீர்படுத்தல்,கொட்டகைளை அமைத்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகளை துரிதப் படுத்துவதற்காகவே அமைக்கப் பட்டதாகவும் இவர்களின் துரித செயற்பாடுகளை பொறுத்தே மக்களை விரைவாக குடியமர்த்துவது சாத்தியமாகு மெனவும் அப்பகுதி செயலணிக்குழுவினர் தெரிவிக்கின்றனர். (ச,தீ)

# கடற்கொந்தளிப்பால் இறந்த மக்களை நினைவுகூர்ந்து கனடாவில் நிகழ்வு

கனடா ரொரன்ரோவில் இலங்கையில் வடக்குக் கிழக்கில் கடற்கொந்தளிப்பால் மரணமடைந்த மக்களை நினைவு கூர்ந்து ஈரநினைவுகளின் கூடல் எனும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கனேடிய தமிழ் பேரவையால் நடத்தப்பட்டது.

வடக்குக் கிழக்கு, தெற்கு மற்றும் கடற்கொந்தளிப்பால் இறந்த மக்கள் அனைவரையும் நினைவு கூரும் நிகழ்வான இதில் பல முக்கிய கனேடிய அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டு தமிழினத்தின் செயற்பாட்டைப் பாராட்டிப் பேசியதுடன் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளினதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் செயற்பாட்டையும் பாராட்டிப் பேசினார்கள்.



அத்துடன் அவர்கள் ஒரு செய்தியையும் அதில் தெரிவித்தார்கள். கனேடியப் பிரதமர் போல்மாட்டின் இலங்கை வருவதாகவும், முக்கியமாக வடக்குக் கிழக்கு நிலைமைகளை நேரில் சென்று பார்ப்பதற்கான முழுமுயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

அத்துடன் பிற இனத்தவருக்கு நடன மூலம் கடல்கொந்தளிப்பால் மக்களுக்குஏற்பட்ட அவலத்தை எடுத்துவிளக்கப்பட்டது.(எ)

### வாகனேரிக்...

எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது புலன் விசாரணையின்படி கிராமங்களில் இம் முரண்பாட்டைப் பயன்படுத்தி இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுகின்ற தேச விரோத சக்திகளே இதனைத் தூண்டும் நோக்கத்தோடும், நிம்மதியாக வாழ்கின்ற மக்களை குழப்பும் எண்ணத்தோடும் இதனைச் செய்ததாக அறியமுடிகின்றது. இக்கிராமம் இராணுவ முகாமை அண்மித்த பகுதி என்பதால் இச் செயலைச் செய்தவர் இராணுவப் பகுதிக்கு வந்ததாகவும், அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இலங்கைப் பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். இவ்வாறான செயல்கள் நடைபெறாது இருக்க எமது மக்களை விழிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேசாலை 3ஆம் வட்டாரத்தில் கத்திக்குத்துக்கு ஒருவர் பலி!

மான்னார் பேசாலை மூன்றாம் வட்டாரத்தில் தம்பியின் கத்திக்குத்திற்கு அண்ணன் பலியானார். மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் பேசாலை கடற்கரையில் இடம் பெற்றது. மீன் பிடிப்பதற்கு கடலுக்குச் சென்ற சமயம் சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தம்பி அண்ணனுக்குக் கத்தியால் குத்தியுள்ளார். கடும் காயத்துடன் பேசாலை வைத்திய சாலையில் இருந்து மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்ட போதிலும் அங்கு இருந்து அம்பியூலன்ஸ் வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் சமயம் இடையில் கத்திக் குத்துக்கு இலக்கானவர் மரணமானார். கத்தியால் குத்திய தம்பி இரவு தலை மறைவாக இருந்த போதிலும் நேற்று அதிகாலையில் தலைமன்னார் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (18)

### ஐ.நா...

நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் என்ற நிலையில் இருந்து தவறி விட்டார் என்ற நிலையை ஏற்படுத்தி உள்ளது. இதே வேளை செயலாளர் நாயகம் இவ்வாறு செல்லாமையானது இலங்கையில் யாழ்ப்பாணம் வன்னி போன்ற பிரதேசங்கள் பிரிந்த இடங்கள், அதாவது தனியான இராச்சியம் நடைபெறுகின்றது என்பதைக் கருதி செயற்பட்டாரா என்ற தன்மையையே ஏற்படுத்தி உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இலங்கை அரசாங்கமும், இலங்கை அரசியல் வாதிகளும் இந்த விடயத்தில் மிகவும் இனவாதப் போக்குடன் நடந்துள்ளார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகத்தை யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்குப் போகவிடாமல் தடுத்தமையானது முழுமையாக மனித உரிமை மீறல்எனவும். இலங்கை அரசியல் வாதிகள் பாதுகாப்பு என்ற ஒரு காரணத்தை முன்வைத்து அங்கு செல்ல விடாமல் தடுத்தமை ஐக்கிய நாடுகளின் தன்மையைப் பாதிக்கும் ஒரு விடயம் எனவும் கூறியுள்ளார்.

எனவே தேசிய வேற்றுமைக்கு எதிரான அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குள் வருகின்ற ஓர் அமைப்பு. அதாவது இதன் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் தாம் ஐக்கிய நாடுகள் சபையின் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான கூட்டம் நடைபெறுகின்ற போது இதுதொடர்பாகக் கொபிஅனானிடம் கேள்வி எழுப்பப்போவதாகவும், யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்கு செல்லாமை குறித்து இதன் போது முறையிடப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

### சுனாமி....

சேதமடைந்துள்ளன. அத்துடன் நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்பட பாடசாலைகள் இடம் பெயர்ந்த மக்களின் நலன் புரி நிலையங்களாகச் செயற்படுகின்றன. இதேவேளை இப் படசாலைகளை வரும் இருபதாம் திகதி திறக்க் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

### பாதிக்கப்பட்ட வட..

இழப்பீட்டுப் பகிர்விலும் பாராபட்சப்படுத்தியதும் தாங்கள் அறிந்த விடயம். இவ்வாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் நேற்று வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் மேலும் காலங்காலமாக போர்க் கலங்களைத் தாங்கி வடக்குக் கிழக்கு மக்களின் சொத்துக்களையும், உயிர்களையும் அழிவிற்குட் படுத்திய இராணுவத்தினரிடம் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நலன்புரி நிலையங்களைக் கையளித்து அவர்களூடாக இழப்பீட்டு உதவிகளை வழங்குகின்ற செயற்பாடு மிகவும் வேதனைக்குரியதாக நாம் கருதுகின்றோம்.

மேலும் அழிவுற்ற இடங்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிட்டுஅவர்களிற்கு ஆறுதல் கூற வந்திருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் அவர்களை வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பார்வையிடாது தடைப் படுத்தியமை அரசின் இன நிராகரிப்பு முனைப்பையும், பாரபட்சமான போக்கையும், மனிதாபிமானமற்ற செயற்பாட்டையுமே வெளிக்கொணர்கிறது. இச் செயற்பாடானது தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு காலங்காலமாகக் காட்டி வருகின்ற பாரபட்சத்தையே வெளிப்படுத்துகிறது இந்த நிலை குறித்து வடக்குக் கிழக்கு மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிருப்தியையும் வேதனையையும் தங்களிற்கு அறியத்தருவதோடு ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானைத் தடைசெய்ததற்கான கண்டனத்தை வெளிப் படுத்துகின்றோம்.

வடகிழக்கு ஆளுநராகிய தங்களிடம், தங்களது வருகை பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களிற்கு பயனளிப்பதாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர் பார்ப்பாகும். (36)

### சுனாமி முறைப்...

லங்காப பொலிசார் பதிவு செய்வதுடன் முறைப்பாடுகளையும் பதிவுசெய்து வருகின்றார்கள்.

பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் பிரதிகளைப் பெறுவதற்கே இப் பணத்தை அறவிடுவதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

கடல் அன்ர்த்தத்தைத் தொடர்ந்து கட்டிய துணியுடன் ஏனைய அனைத்து உடமைகளையும் இழந்து நிர்க்கதியாக வந்துள்ள மக்களிடம் இப் பணத்தை வசூல் செய்வதில் பொலிசார் ஈடுபட்டுள்ளமை மனித நேயமற்ற செயல்களைப் பலரும் பொருமுகின்ற போதிலும் பயம் காரணமாக எதனையும் மேற் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். (41)

### சர்வதேச...

கொள்ளக் கூடாது என்றும். அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இத்தாலிய அரசாங்கம் சில ராஜதந்திரிகளையும், ஏழு ட்ரக்குகளில் நிவாரணப் பொருட்களையும் அவசரமாகப் புலிகளின் பகுதிக்கு அனுப்பி வைத்தது. சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்கள் பல நேரடியாக தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன்தொடர்பு கொள்கின்றன. அவுஸ்திரேலிய அரசாங்கம் முதல் தடவையாக அங்குள்ள தமிழர்புனர்வாழ்வுக்கழக கிளைக்கு ஊடாக தனது உதவிகளை வழங்கி உள்ளது. சிறிலங்கா அரசாங்கம் இவை குறித்து கவலை கொண்டுள்ளது. ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான், தமிழர் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்வதை, பாதுகாப்பு காரணங்களை காட்டி அரசாங்கம் தடுத்துவிட்டது. இத்தாலி நேரடியாக உதவிகளை அனுப்பியதை வெளிவிவகார அமைச்சு ஆட்சேபித்து, இறைமையுள்ள உதவி வழங்கும் நாடுகள் இறைமையுள்ள சிறிலங்கா அரசுடன் தான் தொடர்பு வைக்க வேண்டும் என்றும், இதுமாதிரி இனி நடைபெற மாட்டாது என்றும் அரசாங்கப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகளின் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பாக, அரசாங்கம் வெளிக்காட்டிக் கொள்ளாத பதற்றத்தை இவை காட்டுகின்றன, என்றும் நியூஸ்வீக் குறிப்பிடுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தில் ஊழலும் மோசடியும் மலிந்திருப்பதையும், பெருந்தொகை வெளிநாட்டு உதவியை சரிவரக் கையாள முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதையும் கொழும்பில் இயங்கும் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தைச் சேர்ந்த பாக்கியசோதி சரவணமுத்து சுட்டிக்காட்டுவதை நியூஸ்வீக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் இந்தோனேசியாவின் ஆஷே மாநிலத்தில் அரச படைகளுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் இடையே, சுனாமி நிவாரணத்துக்கு மத்தியிலும் மோதல் நடைபெறும் நிலை இலங்கையில் இல்லாதிருப்பதை இச்சஞ்சிகை சுட்டிக்காட்டுகின்றது.

தற்போதைய நெருக்கடி வரலாற்றை மாற்றிவிடும் என்றும், ஆனால் எந்த வழியில் என்பது இன்னும் எமக்கு தெரியாது என்றும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் கூறுகின்றார். சுனாமியில் தப்பியவர்கள் பெருத்த ஆவலுடன் ஒரு நல்ல நிலையை எதிர்பார்க்கின்றனர். நிலைமை மோசமான நிலைக்குச் செல்வது கடினம், என்றும் நியூஸ்வீக் எழுதியுள்ளது.

### பாதிக்கப்பட்ட....

பகல் 1.00 மணியளவில் இலங்கை நோக்கிப் பயணமாகினர். இக்குழுவில் 9 பெண்களும் அடங்குவர். இவர்கள் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆவலில் தமது சொந்தச் செலவிலேயே செல்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இத் திட்டத்தை நிறைவேற்றும் முகமாக இவர்களைப் போன்ற தொழில்நுட்பவியலாளர்களைத் தொடர்ந்தும் அனுப்புவதற்கு சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திட்டமிட்டுள்ளது. சுவிஸ் நாட்டவர்கள் பலரும் இவ்வாறு செல்வதற்கு முன்வந்திருக்கின்றார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

### பன்னாட்டு...

சுனாமி நிவாரணத்திற்காக அனுப்பப்பட்ட பொருட்கள், இடம் பெயர்ந்த பின்னர் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பான அறிக்கைகள் அதிகரித்து வருகின்றதை அடுத்தே பன்னாட்டுக் குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவு இந் நடவடிக்கையை எடுத்துள்ளது. இது பற்றிப்பொலிசார் தெரிவிக்கையில், தாம் ஏற்கனவே கொள்ளை,களவுடன் சம்பந்தப்பட்ட 20 சந்தேக நபர்களை ஏற்கனவே கைதுசெய்துள்ளோம் எனக் குறிப்பிட்டனர்.

ஜனவரி 9ஆம் திகதி நடைபெறவிருந்த கணினி கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி நிலையத்தை நாடவும்.
கணினியியல் கல்லூரி
யாழ்சாலை, கிளிநொச்சி
(சி-11127)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.